Registered as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

வைகாசி (93)

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 01 [14-05-93] வெள்ளிக்கிழமை ஓசை 85

## உலக சனத் தொகை 550 கோடியாக உயரும்

உலக சனத்தொகை இவ்வருடம் 550 கோடியாக அதிகரித்து விடும் என கணிப்பிடப்பட்டுள்ளது. வளர்முக நாடுகளில்தான் இவ்வதிகரிப்பு பெரும்பாலும் காணப்படுகின்றது. செல்வந்த நாடுகளில் அமெரிக்காவில்தான் சனத்தொகை அதிகரிப்பு அதிகமாகஉள்ளதாககுடிசன தொகைபுள்ளிவிபரபணியகம் அறிவித்துள்ளது. 1997ஆம் ஆண்டிற்கு முன் உலக சனத்தொகை 600 கோடியாகிவிடும் என்றும் 2025 ஆம்ஆண்டிற்கிடையில் இது 850 கோடியாக உயர்ந்து விடும் என்றும் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. சீனா, இந்தியா (10 ஆம் பக்கம் பார்க்க)

# 'புக்காரா' குண்டு வீச்சிற்கு அல்லிப்பளையில் இருவர் பலி

## 10 பேர் படுகாயம்; படகுகள் நாசம்

[தென்மராட்சி நிருபர் பொ. இராசேஸ்வரன்]

அல்லிப்பளை இறங்குதுறைப் பகுதியில் நேற்று சிறிலங்கா விமானப்படையின் இரண்டு ''புக்காரா'' விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சினால் இரு தொழிலாளர்கள் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். பத்துப் பேர் படுகாயமடைந்தனர். மேலும் பலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன. அத்துடன் இத்தாக்குதலினால் மூன்று படகுகள் முற்றாக நாசமாகின. மேலும் பல படகுகள் சேதமடைந்தன. இவ்விமானங்கள் றொக்கட் தாக்குதலையும் நடாத்தின.

நேற்றுக் காலை 7-15 மணியளவில் படகுகளிலிருந்து பொருள்களை இறக்கும் பணிகளில் ஓட்டிகளும் தொழிலாளர்களும தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை திடீரென் விரைந்து வந்த சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் அப்பகுதியை வட்டமிட்டு கண்மூடித்தனமான தாக்குதல்களை நடாத்தின.

முதலில் புக்காரா விமானங்கள் இரண்டும் படகுகளை நோக்கி றொக்கட் தாக்குதல்களை நடாத்தின. சுமார் பதினைந்திற்கு மேற்பட்ட றொக்கட்டுகள் ஏவப்பட்டன.

இதனால் சாவற்காடு சுதுமலையைச் சேர்ந்த சின்னப்பு கனகலிங்கம் (வயது 45) என்பவர் தலை சிதறி ஸ்தலத்திலேயே பலியானதுடன் குருநகரைச் சேர்ந்த இராசரத்தினம் இராசி (வயது 25) என்பவரும் ஸ்தலத்திலேயே பலியானார்.

இதைத் தொடர்ந்து இவ்விரண்டு குண்டுவீச்சு விமானங்களும் நான்கு குண்டுகளை வீசின. இவை அல்லிப்பளைக் கரையோரப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததினால் பல படகுகள் சேதமடைந்தன இதில் மூன்று படகுகள் முற்றாகச் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(86) (மு) (யோ)

### இறங்குதுறை நோக்கி

## அகோர பீரங்கி எறிகணைத் தாக்கு

[யாழ்ப்பாணம்]

அல்லிப்பளை இறங்குதுறை பகுதியை நோக்கி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்தும், கடற்படைப் பீரங்கிப் படகுகளிலிருந்தும் எறிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

நேற்றுக்காலை 11 மணியளவில் ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் நிலைகொணடுள்ள படையினர் கிளாலிக் கரையோரப் பகுதிகளை நோக்கிப் பலத்த எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். சுமார் பத்திற்கு மேற்பட்ட எறிகணைகள் இவ்வாறு தொடர்ச்சியாக ஏவப்பட்டன.

இவ் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தவேளை கிளாலிக் கடற்பரப்பில் இருந்து சிறிலங்காவின் கடற்படைப் பீரங்கிப் படகுகள் பீரங்கித் தாக்குதல்களையும், கலிபர் தாக்குதல்களையும் நடாத்தின. அல்லிப்பளைக் கரையோரத்திலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் கடலில் நான்கு விசைப்படகுகளில் வந்த கடற்படையினரே பீரங்கித் தாக்குதல்களையும், 50 கலிபர் தாக்குதல்களையும் அல்லிப்பளை, புலோப்பளைப் பகுதிகளை நோக்கி மேற்கொண்டனர்.

இவற்றால் சில படகுகளும் உழவு இயந்திரம் ஒன்றும் சேதமடைந்தன. (86. 35)

## ஹெலி நோட்டம்

சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தி ஒன்று கிளாலி, அல்லிப்பளை, புலோப்பளை, எழுதுமட்டுவாள் பகுதிகளை நேற்றுக்காலை பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது.

## மீட்புநிதி சேகரிப்பு

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை அன்று நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் காலை9 மணிதொடக்கம் 10 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்தநாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்தமுடியும் எனத் தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## குண்டுவீச்சில் தப்புவதற்காக தப்பு தண்ணீருக்குள் பாய்ந்தேன்

### காயமடைந்தவர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

''திடீரென வானத்தில்தோன்றிய விமானங்கள் றொக்கட் தாக்குதலை மேற்கொண்டன பயத்தில் என்ன செய்கிறேன் என்று தெரியாமலே தப்புத் தண்ணீரினுள் நின்ற நான் முகம் குப்புற நீரினுள் வீழ்ந்து படுத்தேன். அப்போது எனது முதுகில் பெரும் வலி ஏற்பட்டது.'' இவ்வாறு நேற்று அல்லிப்பளை இறங்குதுறையில் புக்காராவிமானத்தின்குண்டுத் தாக்குதலில்பாரியகாயங்களுக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள மாசிலாமணி குணசேகரம் [வயது 32] என்பவர் கூறினார்.

''அவர் தொடர்ந்து கூறுகையில்: ''நாங்கள் நாற்பது பேருக்கு மேல் படகிலிருந்து பொருள்களை இறக்கி டிராக்டரில் ஏற்றிக் கொண்டிருந் (10ஆம் பக்கம் பார்க்க]

## முப்படைத் தாக்குதலில் காயமடைந்தோர் விபரம்

(தென்மராட்சி)

அல்லிப்பளைக் கரையோரப் பகுதியை நோக்கி நேற்றுக் காலை சிறிலங்கா முப்படைகளும் இணைந்து நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களால் 25 ற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பொன்னையா தங்கவேல் [50] நாகர் கோவில், மாசிலாமணி குணசேகரம் [31] மாத (10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் சுப்பர் சொனிக் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் படுகாயமடைந்த ஆனந்தபுரத்தைச் சேர்ந்த என். பி. பெனாண்டோ [வயது 73] என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தபால் பொதிகள் கொழும்பு பார்த்து திரும்பின

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று காலை 7மணியளவில் 'குமண' கப்பல் வந்து சேர்ந்தது. இக் கப்பலில்தபால் பொதிகள் எடுத்து வந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள்கள் அடங்கிய பட்டியலிலும் தபால் பொதிகள் இடம் பெறவில்லை.

அதே சமயம் 'குமண' இறுதியாக இங்கிருந்து புறப்படும் போது எடுத்துச் சென்ற தபால் பொதிகள் இக்கப்பலில் உள்ளதாக அறிய முடிகிறது.

இப்பொதிகள் கொழும்புத் துறைமுகத்தில் பாரப்படுத்துவதில் ஏற்பட்ட சர்ச்சையினால் யாழ்ப்பாணத்திற்கான தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படவில்லையென்றும் மேலும் அறியமுடிகிறது. முன்னரும் பட்டியலில் குறிப்பிடப்படாமல் தபால்கள் வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (யோ)

## பரீட்சை வினாத்தாள்கள் நேற்று வரவில்லை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெற இருக்கும் பயிலுனர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்வி இறுதிப் பரீட்சை மற்றும் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பரீட்சை ஆகியவற்றுக்கான வினாத்தாள்கள் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த குமண கப்பலில் எடுத்துவரப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

மேலும் இக் கப்பலில் இவ் வினாத்தாள்கள் வந்து சேராமையினால் இவ் வினாத்தாள்கள் கொழும்பிலிருந்து விமான மூலம் யாழ். எடுத்து வரப்படலாம் என கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (பா]

### யாழ். போதனா வைத்தியசாலை

## பிரதான ஜெனரேற்றர் செயலிழக்கும் ஆபத்து

யாழ். போதனா வைத்தியசாலையின் மின் பிறப்பாக்கிகளுள் ஆகக்கூடுதலான மின்னை உற்பத்தி செய்யும் 85கிலோவாற் மின்பிறப்பாக்கி முற்றாக செயலிழக்கும் நிலையில் உள்ளது. இதனால் அதிமுக்கிய தேவையான கழிவகற்றல், தொற்றுக் கிருமி அகற்றல், நீர் வழங்கல் போன்றன முற்றாக ஸ்தம்பிதம் அடையும் அபாயம் உருவாகியுள்ளது.

மேற்படி மின் பிறப்பாக்கி இன்னும் ஓரிரு நாட்களில் முற்றாக செயலிழக்கும் நிலையில் உள்ளது. நாளொன்றுக்கு கூடுதலாக 4 லீற்றர் ஒயிலை அதற்கு விடவேண்டிய நிலையில் கடும் புகையை கக்கிய வண்ணம் அது இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதை திருத்தி அமைக்கும் வரை 35 கிலோவாற், 15 கிலோவாற் மின்பிறப்பாக்கிகளே சேவையில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் உள்ளன. இவை இயங்கினாலும் மேற்படி குறிப்பிட்ட முக்கிய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய மின்னை இவற்றிலிருந்து பெறமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க முன்பு இங்கிருந்து திருத்தத்திற்காக கொழும்பிற்கு அனுப்பிய இரு மின்பிறப்பாக்கிகள் அங்கிருந்து திருப்பி அனுப்பப்படவில்லை என்பது தெரிந்ததே. இதேவேளை இம்முறை கொழும்புசென்ற யாழ் வைத்தியசாலை அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இரண்டு 200 கிலோவாற் மின் பிறப்பாக்கிகளை வழங்குவதற்கு கொள்கை அளவில் அரசாங்கம் இணங்கியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. [சி]

## எதிர்க்கட்சி ஆதரவாளரை பாய்ந்து கடித்த அமைச்சர்

(கொழும்பு)

எதிர்க்கட்சி ஆதரவாளர் ஒருவர்மீது அமைச்சர் ஒருவர் பாய்ந்துகடித்த சம்பவம் தொடர்பாக அவிசாவளைப் பொலிசில் புகாரிடப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:

சுற்றாடல் அபிவிருத்தி பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்விமல்விக்கிரமசிங்காவிற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர் ஒருவருக் (10ஆம் பக்கம் பார்க்க)

### மாரடைப்பால் மரணம்

யாழ். போதனா மருத்துவமனையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றி வந்த டாக்டர் செல்வி வசந்தகுமாரி வைத்திலிங்கம் நேற்று மாரடைப்பினால் மரணமடைந்துள்ளார்.

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஐந்து டரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- நா கயிலைவாசன் இல. 17 கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (4848)

### கார்கசற் றேடியோக்களா கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து; பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எபமிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி/6584)

### வியாபாரிகட்கு

லேஸ், நூல் வகைகள் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள - ஜெயா அழகு சாதனமாளிகை 177A, மின நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-6613)

### திருமண சேவை

எம்மிடம் பொருத்தமான மணமகன் / மணமகள் உண்டு. தொடர்பு:- மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். சந்திப்பு: ஞாயிறு காலை (4866)

### Your Watches & Radios?

Repairs of Watches&Radios Guaranteed DILKA WATCH& RADIO WORKS, 284 Stanley Road, Ariyakulam Junction, Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. (சி-6608)

### சாளரம் இலக்கிய நிகழ்வு

நாகர் கோவில் அமெரிக்க மிஷன் பாடசாலையில் இன்று பகல் 10மணி முதல் 12மணி வரை - இப்பாடசாலை அதிபர் திரு. ஆ. வடிவேலு அவர்களின் தலைமையில் நடைபெறும் ''சாளரம்'' இதழ் இலக்கிய நிகழ்வில் ''உதயத்தின் கதிர்களை உள்ளே வர விடுங்கள்'' என்ற தலைப்பில் செல்வி வே அருந்ததி அவர்கள் சிறப்புரையாற்றுவார்.

### வன்னி மாவட்டத்தில் பணிபுரிய பயிற்சிபெற்ற தாதிகள் தேவை

அறிவுறுத்தல்கள்:
(1) 20 வயதிற்கு மேற்பட்ட பெண்களாக இருத்தல் வேண்டும்.
(2) குறித்த கால அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

காலம்: 15 05-1993
நேரம்: காலை 9 மணி
இடம்: திருநெல்வேலி - முத்துத்தம்பி ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையிலுள்ளமகளிர் அலுவலகம்.

நேர்முகத் தேர்வு:
உங்களது சகல சான்றிதழ்கள், அத்தாட்சிப் பத்திரங்களுடன் குறிப்பிடட திகதியில் நேரில் சமுகமளிக்கவும். [4868]

# சீதனப் பேயை

ளாதார வளத்தை மேம்படுத்துவதன் மூலமும் எமது பொருளாதார வளத்தை பொதுமைப்படுத்துவதன் மூலமும் தேசிய வருமானத்தை சம பங்கீடாக கிடைக்கக் கூடிய வகையில் உழைப்புத்திறனை சமப்படுத்துவதன் மூலமே சீனத்தை ஒழிப்பது சாத்தியமாகும்.

மேற்கூறிய அணுகு முறைகளைக் கைவிட்டு அதாவது சாதியம், சமூக அமைப்பு முறையில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் சீதனம் பற்றிய அறிவின்மை இவைகள் இப்படியே இருக்கும்போது தனிய சீதனம் கொடுப்பதும் வாங்குவதும் தண்டனைக்குரிய குற்றம் என்று கட்டமாக கொண்டு வருவதன் மூலம் நாம் நினைத்த சீதன கொடுமையை தடுத்து நிறுத்திவிட முடியாது. இது மேலும் பல சிக்கல்களை உருவாக்கும் என நாம் நினைக்கின்றோம்.

எமக்குத் தெரியாமலே சீதனக்கொடுக்கல் வாங்கல்கள் மறைமுகமான இடங்களில் நடைபெறும். அதுமட்டும் அல்லாமல் எங்களுடைய சொத்துக்கள் திரடடப்பட்டு கொழும்பு மற்றும் வெளிஇடங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு அங்கே கைமாற்றங்கள் நடைபெறும்.

உடனடியாக நாம் சட்டத்தைகொண்டு வரும்போது இதில் அகப்படக் கூடியவர்கள் சாதாரணபாமர மக்களாகும். வசதி படைத்தவர்கள் மட்டத்தில்ஏற்டடும்சீதனக்கொடுக்கல் வாங்கல்கள் ஆயிரத்தில் ஒன்று தான் எங்களுக்குத் தெரிய வரும். ஆனால் வறிய மக்கள் மட்டத்தில் சீதனம் என்றால் என்னென்றேதெரியாத இதன் கொடுமை பற்றி ஒன்றுமே புரியாதவர்கள் தான் கூடுதலாக இச் சட்டத்தில் சிக்குண்டு கஷ்டப்படுவார்கள்.

எனவே சட்டத்தை நாம் கொண்டு வருவதற்கு முன்பு மேற்கூறிய விடயங்களில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும்.

மலரப் போகின்ற தமிழீழத்தில் இச் சீதனக் கொடுமையானது அறவே இருக்கக்கூடாதென்பதை நாம் விரும்புகின்றோம். அதற்கு முன்பாக பிரசாரங்கள் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்தி அதன் பின்பே இச்சட்டங்கள் போடுவது பற்றி முடிவுகள் எடுக்க வேண்டுமென்பதே எமது அபிப்பிராயமாகும்.

### வாக்காளர் அட்டை இல்லை

(கொழும்பு)

மலையகத்தில் பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்காளர் அட்டை வழங்கப்படவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது தேர்தல் திணைக்களத்தினால் இவ் வாக்காளர் அட்டைகள் அங்கு அனுப்பப்பட்ட போதிலும் அவற்றை தோட்ட சுப்றின்டன்கள் சம்பந்தப்பட்ட தோட்டத் தொழிலாளிகளுக்கு வழங்கவில்லை எனக் கூறப்படுகிறது.

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உடுவில் பிரிவு

## பொதுநிகழ்வுக் கண்காட்சி

எமது பிரிவினரால் நடாத்தப்பட இருந்துஒத்தி வைக்கப்பட்ட மேற்படி பொதுநிகழ்வுக் கண்காட்சி எதிர்வரும் 21,22-ந் திகதிகளில் மரு/இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

இலங்கை செஞ்சிலுவை சங்கம்
(4693) உடுவில் பிரிவு

---

## அறிவித்தல்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் தொண்டர் சபை விஷேட பொதுக் கூட்டம் (16-5-93) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சபைக் காரியாலயத்தில் தலைவர் திரு வை. செல்லையா அவர்களின் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும். அத்தருணம் திருவிழாவிற்கு முன் செய்யும் வேலைகள் பற்றி ஆலோசிகக இருப்பதால் அனைத்து அங்கத்தவர்களையும தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு: மேற்படி ஆலயத்தில் கீழ் குறிப்பிடப்படும் கடைகள் போட விருமபுவோர் (20 - 5 - 93) வியாழக்கிழமை காலை 8 மணிக்குச் சபைக் காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

1. கச்சான் கடை
2. இனிப்புக் கடை
3. தேநீர்க் கடை
4. மணிக் கடை
5. ஐஸ்பழக் கடை

இப்படிக்கு
செ. ஞானசொருபன்
செயலாளர்

(சி-6622)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 27 – 06 – 1966



உதிர்வு: 25 – 05 – 1992

பிரபல ஈழத்துப் பாடகி

## ரமணியம்மா (ராசலட்சுமி)

அன்பின் திருவுருவாய் பாசத்தின் ஒளி விளக்காய் இருந்து திடீரென எம்மை விட்டுப் பிரிந்து சென்ற எமது அன்பு தெய்வமே, நீங்கள் எம்மை விடடுச் சென்று ஓர் ஆண்டுகள் சென்றாலும் மாறாது எம் சோகம். உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனை பிரார்த்திக்கும்,

அரசடிச்சந்தி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

(14-05-1993) இன்று எமது இல்லத்திற்கு வருகை தரும்படி உற்றார், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். (சி-6621)

---

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-14

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வில்பத்தைக் காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப்.பிரசன்னா** (இரத்தினம் சதானந்தன்-110/2, திருவையாறு-கிளிநொச்சி)

யாழ்-மானிப்பாயில் எமது சவர்க்காரத் தொழிற்சாலை ஒன்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய,

**கரன்** (கணபதிப்பிள்ளை சிவசரணம்-தாவளை, இயற்றாலை, வரணி, கொடிகாமம்-யாழ்)

**குட்டி** (சின்னத்தம்பி பரமேஸ்வரன்-நவாலி தெற்கு, மானிப்பாய்-யாழ்)

**தேவு** (சின்னையா சாந்தகுமார் - ஆனைக்கோட்டை-யாழ்)

1988ஆம் ஆண்டு மட்டு - களுவங்கேணிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**நாகவேல்** (-மாங்காடு-மட்டு)

திருமலையில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட அதே இடத்தைச்சேர்ந்த திரைப்படத் தயாரிப்பாளரான தமிழ்ப்பெண்.

1989ஆம் ஆண்டு யாழ்-திருநெல்வேலியில் இந்தியப் படையினருடனான சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.டெஸ்மன்** [வேலையா ரமேஸ்குமார்-சிவன் வீதி-திருமலை]

மிருசுவிலில் இந்தியப்படையினரின் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய.

**கப்டன் கில்மன்** (கிருஷ்ணசாமி இராமச்சந்திரன்-மீசாலை தெற்கு,சாவகச்சேரி-யாழ்)

இதே சம்பவத்தின்போது பேருந்து ஒன்றின் மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட நெடுந்தீவு 3 ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த தமிழ்ச்சிறுமி.

மணலாறு-நெடுங்கேணிப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உணவுவிடுதி ஊழியர் உட்பட 2 தமிழர்கள்.

யாழ்-மருத்துவமனையில் இந்தியப்படையினரால் சடலமாக ஒப்படைக்கப்பட்ட தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு அம்பாறை தங்கவேலாயுதபுரம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பொறிவெடி விபத்தில் வீரச்சாவெய்திய.

**கஜன்** ( - கல்யாணகுமார் - நெடுங்கேணி - மணலாறு)

மட்டு - வாகரை பூரியன் காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட வாகரை பாலர் பாடசாலை ஆசிரியை.

1992ஆம் ஆண்டு மட்டு - தும்பன் கேணிப்பகுதியை சிறிலங்கா இராணுவம் மற்றும் தேசவிரோத சக்திகள் சுற்றிவளைக்க முயன்ற போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். தனஞ்செயன்/வொசிங்டன்** (சுப்பிரமணியம் தனஞ்செயன் - பழுகாமம்-மட்டு)

ஆதரவாளர்-

**ஞானசேகர் ஜெயகணேஷ்** (பழுகாமம்- மட்டு.)

திருமலை - ஈச்சலம்பத்தை முகாம் இராணுவம் வெருகல் - முட்டுச்சேனை,கல்வெட்டு - வான் பகுதிகளை சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட போது தீவிர ஆதரவாளர் முட்டுச்சேனை பாடசாலை அதிபர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட-

**கணபதிப்பிள்ளை** (சம்பூர், மூதூர்- திருமலை)

பாடசாலைப் பணிகளில் ஈடுபடும் போது விபத்தில் பலியான விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர், ஆதரவாளர்-

**மதிவாணன்** (........)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6619)

# தாம்பத்திய வாழ்வை ஆரம்பிக்க சீதனம் என்ற முதலீடு அவசியம்

**இளையவன்**

சிக்கலான சமூகப் பிரச்சினைகள் பற்றிப் பகிரங்கமான முறையில் விவாதங்கள் நடத்துவதும், அப் பிரச்சினைகள் தொடர்பான பரவலான விழிப்புணர்வைத் தோற்றுவிப்பதும் வரவேற்கப்பட வேண்டிய ஒரு முயற்சியே அவ்வகையில் ஈழநாதம் சீதனப் பிரச்சினை பற்றிய விவாதத்தை ஆரம்பித்திருப்பது சாலப் பொருத்தமானது. பாராட்டப்பட வேண்டியது. இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்திருக்கும் திரு. க. தணிகாசலத்தின் கருத்துக்கள் கவனத்தை ஈர்த்தமையால் எனது கருத்துக்களையும் முன் வைக்க விழைகின்றேன்.

திரு. தணிகாசலம் முன் வைத்துள்ள கருத்துகளில் பலவும் எனக்கும் உடன்பாடானவையே. குறிப்பாகச் சீதனப் பிரச்சினை என்பது ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினை; சீதனம் என்பது மணமகனுக்கு வழங்கப்படும் சொத்து அல்ல; சீதன முறையால் பயனடைவோர் பெண்களே; சீதனப் பிரச்சினையுடன் பெண்களின் தனிப்பட்ட மனப் போக்கும் தொடர்பு கொண்டுள்ளது என்பன போன்ற கருத்துக்கள் எனக்கும் உடன்பாடானவையே. எனினும் சீதனப் பிரச்சினையில் பெண்ணாதிக்கம் தலைவிரித்தாடுகின்றது என்பதை சீரணித்துக் கொள்ளவும் சீதனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் காதல் திருமணங்களை ஊக்குவிக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமலும் இருக்கின்றது.

வாழ்க்கைக்குப் பொருள் ஆதாரமானது ''பொருளில்லாருக்கு இவ்வுலகம்இல்லை'' என்பது வள்ளுவன் வாய்மொழியில் கூட இடம்பெறும் அளவுக்கு இல்வாழ்வுக்குப் பொருள் முக்கியமானது என்பது மறுக்க முடியாதது. இன்னும் சொல்லப் போனால் ''கையில் காசில்லாதவன் கடவுளே ஆனாலும் கதவைச் சாத்தடி'' என்னும் முதுரை கூட இல்வாழ்க்கைக்கு பொருளின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும். பொருள்-பணம் என்பன இல்லாமல் வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமா? என்று எண்ணிப் பார்த்தால் இல்லை என்பதே பதிலாகக் கிடைக்கும். எனவே தான் புதுவாழ்வு ஒன்றில் காலடி எடுத்து வைக்கும் புதுமணத் தம்பதியினருக்கும், தமது வாழ்வை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப முதலீடு ஒன்று அவசியமாகிறது. அந்த ஆரமப முதலீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வழியாகவே சீதனம் கொடுக்கும் வழக்கம் எமது மக்களிடையே நிலவி வருகின்றது.

மேலும், எமது தேசத்தைப் பொறுத்தவரையில் சீதனம் என்பது அதன் கோரவடிவத்தைப் பெற்றுவிடவில்லை என்றே கருதுகின்றேன். சீதனத்திற்காக மாமியார் மணமகனின் உடந்தையுடன் மருமகளைக் கொலை செய்யும் சம்பவங்களோ; காஸ்குக்கர்வெடித்தமையால் ஏற்படும் பெண்களின் திடீர் மரணங்களோ; தலைப் பிரசவத்திற்காக தாய் வீடு செல்லும் பெண்கள் ஸ்கூட்டர் இல்லாமையால் திரும்பவும் கணவனிடம் வர முடியாத சூழல்களோ; திருமணத்திற்குப் பின்னான சீர் கொடுப்பனவுகளால் குடும்பம் சிதையும் நிலையோ; தமிழகத்தைப் போல் இங்கில்லைஎன்று தான் நினைக்கின்றேன். திருமணத்திற்கு முன்பே கொடுக்கல்-வாங்கல்களை நறுக்காகத் தீர்த்துக் கொள்ளும் ஒரு முயற்சியாகவே சீதனத்தில் பேரம் பேசுதல்கள் இடம் பெறுகின்றன என்றே நான் நம்புகின்றேன். அதாவது புதுமணத் தம்பதியரின் இணக்கமான நல்வாழ்வு என்ற நந்நோக்கின் அடிப்படையில் பெரியோர்களும் பெற்றோர்களும் இணைந்து செய்து கொள்ளும் ஏற்பாடுகளில் ஒன்றாக தவிர்க்க முடியாத வகையில் சீதனமும் இடம் பெறுகின்றது என்றுதான் நான் நம்புகின்றேன்.

சீதனம் என்பது மத்திய தர வர்க்கக் குடும்பங்களுக்குஇடையில் தான் பிரச்சினைக்கு உரியதாகின்றது உடலுழைப்பை விற்று வாழும் சாதாரண மக்களுக்கு இடையில் அல்லது மேட்டுக் குடியினர் மத்தியில் சீதனப் பிரச்சினை பெரும்பாலும் பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை என்றே கருதுகின்றேன். தங்கள் இல்லாமைகளை அல்லது இயலாமைகளை உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாமலும் பகட்டு வாழ்வில் மயங்கிப் போய் 'சமூக அந்தஸ்து' 'கௌரவம்' என்ற போர்வைகளைப் போர்த்திக் கொள்ளும் போலித் தன்மையாலும் சூழப்பட்டு நிற்கும் மத்திய தர வர்க்கம் தான் பெரும்பாலும் பொருளாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்றதுஇதனால் இவ்வர்க்கத் தரத்தினைச்சேர்ந்த பெண்களும் சீதனப்பிரச்சினைகளால் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது. இயலாமைகளை ஒப்புக்கொண்டு தாம் பேணும் போலியான சமூக தரத்தைவிட்டு கீழிறங்க இத்தரத்தைச் சேர்ந்த அநேக பெண்கள் முன்வராமையே இவ்வகுப்பினரிடையே 'முதிர் கன்னிகள்' இருப்பதற்கு காரணம் ஆகும் என்பது என் அபிப்பிராயம்,

பெற்றோர் ஒவ்வொருவரும் தமது குழந்தைகளின் வளமான -பாதுகாப்பானஎதிர்காலம் ஒன்றுக்கு போதுமான உத்தரவாதங்களை நாடுவது மனிதகுல இயல்பு.

இந்த வகையில் பெண் வீட்டார் தமது பிள்ளையின் எதிர்கால நல்வாழ்வுக்கு என்று மனமுவந்து அளிக்கும் கொடையாக சீதனம் இருக்குமெனின் அது பிரச்சினைக்கு உரியதாக இருக்க வேண்டியதில்லை. ஆனால் பதிலுக்கு சீதனம் என்று ஒரு தொகையும், நன்கொடை என்று இன்னுமொரு தொகையும், சகோதரிகளுக்கு என்றும்மற்றுமொரு தொகையும் கோரப்பட்டு பேரம் பேசப்படும்போதுதான் சீதனம் அருவெறுப்புக்கு உரியதாகிறது. இந்த சந்தர்ப்பங்களில் தான் வாழ்க்கைக்காக பொருள் என்பதற்குப் பதிலாகபொருளுக்காக வாழ்க்கை என்பது மேலோங்குகின்றது. உண்மையான புரிந்துணர்வும் இணக்கமான நல்லெண்ணமும் இல்லாமல் வெறுமனே பொருளாதாரஅடிப்படையில் கட்டப்படும் குடும்ப உறவுகளில் பல வேளைகளிலும் ஆழமான 'அன்பு' என்பது நசியுண்டு போய்விடுவதற்கு எத்தனையோ உதாரணங்களைக் காட்ட முடியும். இத்தகைய சந்தர்ப்பங்களில் துணிவும், தன்னம்பிக்கையும் கொண்டவர்களாக செயற்பட இளைஞர்கள் முன்வருவார்களாயின் குடும்ப உறவுகள் ஏற்படுவதைப் பெரியோர்களால் தடுத்துவிட முடியாது.

இந்தஇடத்தில்தான் காதல் திருமணமா? பெற்றவர்கள் பொருத்தம் பார்த்து செய்து வைக்கும் பேச்சுத் திருமணமா? சிறந்தது என்று ஒரு கேள்வி எழுகின்றது. வயது வந்த ஒவ்வொருவரும் அவர் ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி, தமது வாழ்க்கையைத் தாமே தான் தீர்மானிக்க வேண்டியவர்கள் என்பதுவே எனது கருத்தாகும். ஒரு தனி நபரின் வாழ்க்கையைப் பொறுத்த வரை பெற்றோராக இருந்தாலும் சரி உடன் பிறப்பினராக இருந்தாலும் சரி அல்லது அயலாராக - நண்பராக - வேறாயினும் சரி ஆலோசனைகள் அல்லது ஆக்க பூர்வ உதவிகள் செய்ய முடியுமே தவிர ஒருவருக்காக மற்றவர் வாழ்ந்து கொடுக்க முடியாது. எனவே ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையில் தாம் எட்ட வேண்டிய இலக்குகள்குறித்து திட்டவட்டமான தெளிவோடும் அதற்கான உறுதியோடும், துணிவோடும் செயற்பட முன்வருமிடத்து பணம் என்பது பெரும்பாலும் குறுக்குச் சுவராக எழுந்து வருவதைத் தடுத்துவிட முடியும்

எனினும் பருவ உணர்ச்சிகளின்சித்துவிளையாட்டுக்களை எல்லாம் காதல் என்று அங்கீகரித்து விடுவது பொருத்தமான முன்உதாரணமாகாது. பள்ளிப்பருவத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளை எல்லாம் காதல்என்ற அகராதியில் சேர்த்துக் கொள்வதால் எதிர்கால சமூகத்தில் சீர்கேடுகள் மலிந்து போய்விடலாம் என்பதால் பெற்றோர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இத்தன்மையானது! இத் தன்மையானவர்களிடம் மட்டுமே தோன்றக் கூடியது! என்றெல்லாம் காதலுக்கு வரைவிலக்கணம் கூறுவது பொருத்தமற்றது தான். ஆனாலும் வயதுவந்த ஆணும் பெண்ணும் எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி உண்மையான புரிந்துணர்வின் அடிப்படையில் தமது வாழ்வின் சுகதுக்கங்களை - இன்ப துன்பங்களை துணிவோடும் தன்னம்பிக்கையோடும் முன்வருமிடத்து சமூகம் அதற்கு வாழ்த்துச்சொல்ல ஒருபோதும் தயங்காது. அதைவிடுத்து ''கால்களில்லாமல் வெண்மதி வானில் தவழ்ந்து வரவில்லையா இருகைகளில்லாமல் மலர்களை அணைத்து முத்தம் தரவில்லையா'' என்று காதல் மயக்கத்தினால் கிறங்கினால், பின்னர் ''ஏன் பிறந்தாய் மகனே! ஏன் பிறந்தாயோ'' என்று சோககீதம் இசைக்க வேண்டி வரும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆக முடிவாகச் சொல்வதானால் சீதனம் என்பது தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரின் வாழ்க்கையுடனும் தொடர்பு கொண்டது சீதனம் வாங்கலாமா? கொடுக்கலாமா? என்பதை ஒவ்வொருவரும் தத்தம் சூழலில் இருந்துதான் முடிவு செய்யவேண்டும். எனினும் வாழ்க்கையில் அன்புக்கும், மனிதாபிமானத்துக்கும், விட்டுக் கொடுப்புகளுக்கும், சமூகம் முதன்மை அளிக்குமானால் பொருள் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டு விடும் என்பதுவே எனது கருத்தாகும். ○

# சீதனப் பேயை விரட்ட வழி என்ன?

திருமதி
**அன்னபூரணி இராசையா**

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் மட்டத்தில் இன்று இருக்கின்ற சீதனம் கொடுக்கும் வழமையானது ஆரம்ப காலத்தில்மணமகளிற்கும் மணமகனிற்கும் பெண் வீட்டார் அதாவது மணமகளின் பெற்றார், மனமுவந்து கொடுக்கும் சொத்துக்கள் சீதனமாக கருதப்பட்டது. காலப்போக்கில் இவை மாற்றமடைந்து மணமகனின் வீட்டார் வற்புறுத்தி மணமகள் வீட்டாரிடம் காசாகவும், உடைமைகளாகவும், நன்கொடைகளாகவும், கேட்டு வாங்கும் மரபாக இன்று மாறியுள்ளது. இந்நடைமுறை எத்தனையோ பெண்களின் திருமணத்தை இடைநிறுத்தியதும் அல்லாமல் தமிழ் சமுதாயத்தில் பல பொருளாதாரத் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இப்படி ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் சமுதாயத்தில் புரையோடி இருக்கும் இச்சீதனம் என்ற பேயை சீதன தடைச் சட்டம் போடுவதால் மட்டும் விரட்டி விட முடியாது. இச் சீதனத்தின் தோற்றுவாயை தெரிந்து அதை மாற்றிஅமைப்பதன் மூலமே சீதனகொடுமையை நிறுத்த முடியும்.

சீதனப் பரிமாற்றம் தனியார் சொத்துடைமை பொருளாதாரத்தில் இருந்தே ஆரம்பமாகிறது. குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளான இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் கூடுதலாகவும் ஜப்பான், இந்தோனேசியா மலேசியா போன்ற ஆசியான் நாடுகளில் பரவலாகவும் இருக்கின்றது. பொதுஉடைமைநாடுகளிலும் கைத்தொழில் வளர்ச்சியடைந்த மேற்கைரோப்பிய நாடுகளிலும்இச்சீதனதோற்றுவாய்கள் அழிக்கப்பட்டு சீதனப்பரிமாற்றம் இல்லாமல் திருமணங்கள் நடைபெறுகிறது ஆனால் தென்கிழக்காசிய நாடுகளிலும் ஆசியான் நாடுகளிலும் சீதனத்தோற்றுவாய் காரணிகளை கண்டறியாமல் வேறுமனே சட்டங்களைக் கொண்டு வந்ததின் மூலம் இச்சீதன முறை அழிக்கப்படாமல் வளர்ச்சியடைந்திருப்பதையே காணக்கூடியதாக உள்ளது.இந்தியாவில் 1961-ம் ஆண்டு இச்சீதன தடுப்புச்சட்டம் கொண்டு வரப்பட்டும் சீதன கொடுக்கல் வாங்கல்கள் தடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும் வளர்ச்சியடைந்ததாகவே தெரிகிறது.

எமது பிரதேசத்தில் இச்சீதன வழக்கானது சமூக அமைப்பிலேயே ஊடறுத்து இருக்கின்றது. இதன் முக்கிய தோற்றுவாய்களாக அன்றில் இருந்து இன்றுவரை நடைமுறையில்உள்ள தேசவழமைச் சட்டங்கள், சாதி, மதம் பெண் அடக்குமுறை இருந்து வருகிறது. அத்துடன் காதல் திருமணங்களுக்கு சமூகத்தில் எழும் எதிர்ப்பு பெண்கள் தொழில்செய்வது தவறு என்ற மூடநம்பிக்கை மற்றும் கல்வி, வேலைவாய்ப்புகளில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகள் சமத்தன்மை இல்லாத வருமானம் ஆகியவை சீதனமுறை தொடர்வதற்கு காரணமாக இருக்கின்றன மேற்கூறியவைகளில் மாற்றங்களை கொண்டு வருவதன் மூலமே சீதனக்கொடுமையை முற்றாக நிறுத்தமுடியும்.

இச்சீதன முறையானது எமது சமூகத்தை எவ்வளவு தூரம் பின் தள்ளி இருக்கிறது என்பதைப்பற்றியவிபரங்களை எமது மக்களுக்கு முதலில் தெரியப்படுத்த வேண்டும். அதே போன்று எமது கல்வித் திட்டங்களும் மாற்றங்கள் செய்யப்பட்டு பெண்களும் தொழிற் கல்வி கற்பிக்கப்பட்டு ஆண்களுக்கு சமமாக ஏன் மேலதிகமாக கூட பெண்களை வேலைகளில் அமர்த்த வேண்டும். உழைக்கும் திறன் அவர்களின் கையில் இருக்கக்கூடிய அளவுக்குமாற்றங்கள்கொண்டு வரப்படவேண்டும்.

இன்று எம்மத்தியில் இருக்கும் சாதியமானது காதல் திருமணங்களைமுற்றாகதடை செய்கிறது. எனவே சாதியத்தின் அரைகுறை எச்சங்கள் கூடசமூகத்தில்இல்லாதொழிக்கவேண்டும். எந்தவொரு ஆண் மகனும் ஒரு பெண்ணை விரும்பி திருமணம் செய்யலாம் என்பதும் எந்த ஒரு பெண்ணும் தனக்கு விரும்பிய ஒரு ஆணையும் மனம் விரும்பி திருமணம் செய்யலாம் என்ற தன்மையை எமது இளம் சமூகத்தவர் மட்டத்தில், பாடசாலைகள் உயர் கல்விக் கூடங்கள், மற்றும் சமூக மையங்களில், இக் கருத்துருவத்தை உருவாக்க வேண்டும்.

இச் சீதனம் வாங்குவதென்பது பிற்போக்கானது என்பதை மக்களுக்கு எமது தொடர்பு சாதனங்கள் மூலம் தெரியப்படுத்த வேண்டும். இன்று எமது சமுதாயத்தில் எத்தனையோ பிற்போக்கு நடவடிக்கைகள்மறையப்பட்டு தேசிய உணர்வு மேலோங்கி வளர்வதற்கு எங்களுடைய பிரசாரமும் எங்களுடைய கருத்துருவாக்கங்களும் அமைந்திருக்கும் போது ஏனஇச்சீதன கொடுமை பற்றியும், சீதனம் கொடுப்பதுவாங்குவது பிழை என்ற கருத்தையும் மக்களுக்கு முன் வைக்க முடியாது?

இச்சீதன முறையானது தனிய பெண்களுடன் எமது சமூகத்தில் இருக்கவில்லை. ஆண்களுக்கும் இதில் பங்கு இருக்கின்றது. எனவே இருபாலாரும்உணர்ந்து இதை நிறுத்த முன்வர வேண்டும். இச் சீதன கொடுக்கல் வாங்கலில் பெண் அடக்குமுறை, ஆணாதிக்கம் என்று சொல்வதை விட பொருளாதாரத்தில் உள்ள ஏற்றத் தாழ்வே முக்கிய காரணமாக அமைகிறது. எனவே எமது பொரு

(2ஆம் பக்கம் பார்க்க)

# ஈ. பி. டி. பியும் சிங்களவர்களும்

நிலாந்தன்

டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் இரண்டாம நிலைத் தலைவர்களில் ஒருவராயிருந்தவர் .ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் இராணுவப் பிரிவான பி எல்.ஏ. இன் தளபதிகளில் அவர் முக்கியமானவர். மட்டக்களப்பு சிறையுடைப்பிலிருந்து தப்பிச்சென்ற வரதராஜப் பெருமாள் தமிழ்நாட்டில் ஈ பி.ஆர்.எல்.எவ். இல் முழுநேர உறுப்பினராகச் சேர்ந்து விரைவில் பத்மநாபாவை இயக்கும் சக்தியாக மாறியபோது டக்ளஸ் தேவானந்தா போன்ற இரண்டாம் நிலைத் தலைவர்கள் அதிருப்தியடைந்தார்கள்.வரதராஜப் பெருமாளின் எழுச்சியே நாபா-தேவா பூசல்களை கூர்மையடையச் செய்தது என்று கூறுபவர்களும் உண்டு இப்பொழுதும் தேவா அணியிலிருப்பவர்களைக் கேட்டால் அவர்கள் நாபாவைவிட பெருமாளைத்தான் மோசமாக விமர்சிப்பதைக் காணலாம்.

தளப்பிரதேசத்தில் உள்ள தலைமை அது எத்தகைய முற்றுகைகளிற்குள் இருந்தாலும பின்தளத்தில் பத்திரமாக இருக்கும் தலைமையை விடப் பலமானதாகவே இருக்கும். இதுதான் தேவா - நாபா விவகாரத்திலும் நிகழ்ந்தது. தனது வெற்றி பெறாத காரைநகர் முகாம் தாக்குதல் போன்ற சில தாக்குதல் முயற்சிகளின் மூலம் தேவா யாழ்ப்பாணத்தில் பிரபல்யமடையலானார். தேவா மீதான தனது பிடி பலவீனமடைவதை தமிழ் நாட்டிலிருந்து நாபா உணர்ந்தார். எனவே தேவாவைப் பலவீனப் படுத்தும் சில முயற்சிகளில் அவர் இறங்கினார். இவற்றுள் தேவாவிற்கான விநியோகங்களை மட்டுப்படுததியது அல்லது நிறுத்தியது முக்கியமானது. பதிலாக தனக்கு விசுவாசமாயிருந்த கிழக்குப் பிராந்தியத் தளபதி கபூரை, நாபா மேலதிக விநியோகங்களின் மூலம் பலப்படுத்தலானார். ஒரு கட்டத்தில் வழமையானசந்திப்பிற்காக தமிழ் நாடு வரும்படி தேவா அழைக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் தனது சகாக்கள் தடுத்ததையும் மீறி தேவா தமிழ் நாடு போனார். அங்கு அவரை நாபாவின் ஆட்கள் வீட்டுக்காவலில் வைத்ததாக தேவாவின் ஆட்கள் இங்கு கூறினார்கள் தேவா அகலும் வரை காத்திருந்த கபூர் அணியினர் விரைந்து செயற்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் தென்மராட்சியில் இருந்த ஈ. பி. ஆர். எல். எவ் அணி நாபாவற்கு விசுவாசமானதாயிருந்தது. எனவே யாழ்ப்பாணத்தில் தனது நிலைகளைப் பலப்படுததிக் கொண்டு வந்த கபூர் அணியினர் தேவாவின் முகிய சகாவான ரமேஷைக் கைது செய்தார்கள் அதோடு நாபா-தேவா அணிகளிற்கிடையிலான பூசல்கள். அவற்றின் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டன. அத்தியடியில் தேவாவின் அணியைச் சேர்ந்த சுமார் 75 பேர் ஊர்வலமாகச் சென்று தமது ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு இயக்கத்திலிருந்து விலகுவதாக அறிவித்தார்கள். அவர்கள் ரமேஷை உடனடியாக விடுவிககுமாறு கோரினார்கள். ரமேஷ் விடுவிக்கப்பட்டார்.

இச்சம்பவத்தோடு ஈ. பி. ஆர். எல். எவ். திட்டவட்டமாக இரு அணிகளாக உடைந்துவிட்டது. தமிழ் நாட்டிலிருந்த தேவா விரைவில் யாழ்ப்பாணம் திரும்ப உத்தேசித்திருந்ததாகவும் கூறப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் தான் சூளைமேட்டுச் சம்பவம் நிகழ்ந்தது.

சூளைமேட்டில் தேவாவின் முகாம் இருந்தது. அங்கிருந்து சென்றவாகனம் ஒன்று தெருக்களில் வேகமாக ஓடியபோது ஊர்ப்பெண்களின்மீது சகதியை வாரி வீசிச் சென்றது என்றும் இதனால் கோபமடைந்த கிராம வாசிகள் முகாமை முற்றுகையிட்டார்கள் என்றும், அவர்களை மிரட்டுவதற்காகத் தேவாவின் ஆட்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது அதில் ஒரு கிராமவாசி கொல்லப்பட்டுவிட்டதாகவும் தேவா அணியைச் சேர்ந்த ஒருவர் பின்னர் கூறினார். மேற்படி சம்பவத்தில் கொல்லப்பட்டவர் அ. இ. அ. தி. மு. க. வின் உறுப்பினர் என்றும் கூறப்பட்டது. தொடர்ந்து எம். ஜி. ஆர். அரசு தேவாவைக் கைது செய்து சிறையில் போட்டது. பிறகு சிறிது காலத்திற்கு எல்லாருமே தேவாவை மறந்து விட்டார்கள். அவருடைய சகாக்கள் தமிழ்நாட்டில் உணவுக்கும், வதிவிடத்திற்கும் தவித்துத் திரிந்தார்கள். இதனால் இவர்களிற் சிலர் பின்னர் குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

நாபா, தேவாவை இயக்கத்திலிருந்தும் நீக்கி விட்டார். இதற்கு, தேவா மீது அவர்கள் வைத்த குற்றச்சாட்டுக்களில் முக்கியமானவை இரண்டு. ஒன்று அவர் நிதி மோசடிகளில் ஈடுபட்டார் என்பது. மற்றது அவர் தமிழ் நாட்டிலுள்ள நக்சலைட்டுக்களுடன் தொடர்பு வைத்திருந்தார் என்பது தவிர, சூளைமேட்டுச் சம்பவமும் ஒரு காரணமாகக் கூறப்பட்டது.

இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு முன்பு தேவா விடுவிக்கப்பட்டார். சிதறிக் காணப்பட்ட தனது அணியினரைத் திரட்டினார். அப்பொழுது தமிழ்நாடு அரசு இப்படி உதிரிகளாகத் திரிந்த புலிகளல்லாத இயக்கத்தவர்களிற்கு ஆளுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் உதவ முன்வந்தது. தேவா தனது ஆட்களில் சுமார் நூறு பேரைப் பதிவு செய்து பணத்தை மொத்தமாகப் பெற்றார் என்றும், அப்பணத்தில் அவர்கள் சில வாகனங்களை வாங்கி ஒரு இயக்கத்தைப் போல ஓடித் திரிந்ததாகவும் பின்னர் அவர்களிடமிருந்து விலகி வந்த ஒருவர் கூறினார்.

இந்திய - புலிகள் யுத்தம் மூண்ட பின் புலிகளுக்கெதிரான இயக்கங்களை ஏதாவது ஓர் இயக்கத்தின் தலைமையின் கீழ் ஒன்று திரட்ட, புதுடில்லி முயன்றபோது வரதராஜப் பெருமாள் தலைமையில் நாபா அணி அதற்குத் தயாராக முன்வந்தது. நாபா அணி புதுடில்லிக்குப் பூரண விசுவாசமாக மாறவும் தேவா அணி தவிர்க்க முடியாதபடி புதுடில்லியிடமிருந்து சற்று விலகி நிற்க வேண்டியதாயிற்று.

88 இல் மாகாண சபைத் தேர்தல்களிற்கான அறிவிப்பு வெளியாகியபோது அதில் ஈ. பி. ஆர். எல். எவ். தலைமையிலான அமைப்புத் தவிர வேறெந்தக் கட்சியும் போட்டியிடக் கூடாது என்பதில் புதுடில்லி திட்டவட்டமாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் தேவா தேர்தல்களில் போட்டியிடப் போவதாக வலிமையான ஓர் ஊகம் எழுந்தது. ஆனால் தேர்தல் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு தேவா தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டார். சிறுவர்களைக் கப்பத் தொகை கேட்டுக் கடத்தியதாக அவரது அணி மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இது பற்றிக் கருத்துத் தெரிவித்த தேவாவிற்கு நெருக்கமான வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர், தேவா தேர்தலில் குதித்தால், பிரசார மேடைகளில் நாபா, தேவா அணியினருக்கிடையிலான சூடான விவாதங்களில் இரு பகுதியினரதும் ரகசியங்கள் பல அம்பலமாகிவிடும் என்றும், குறிப்பாக வரதராஜப்பெருமாளிற்கு எதிரான பல ரகசியங்களை பகிரங்ப்படுத்தக் கூடிய ஒரு நபராக தேவா காணப்பட்டதால் அவரைக் காட்சியிலிருந்து அகற்ற வேண்டிய தேவை நபா அணிக்கும், புதுடில்லிக்கும் இருந்தது என்றும் எனவே பொய்யான குற்றச்சாட்டுக்களின் பிரகாரம் அவர்கள் தேவாவைச் சிறைக்குள் போட்டு விட்டார்கள் என்றும் கூறினார்.

பின்னர் விடுவிக்கப்பட்ட தேவா ஐ.பி கே.எவ். விலகிச் சென்ற தருணத்தில் கொழும்புக்கு வந்துவிட்டார். இங்கு அவரது அணி தன்னை ஈ.பி. டி.பி. ஈழமக்கள் ஜனநாயக முன்னணி) என்ற பெயரில் ஒரு கட்சியாகப் பதிவு செய்து கொண்டது.

ஈ.பி.டி.பி. கொழும்புக்கு வந்ததை இந்தியாவுககு எதிரான ஒரு நகர்வாக பொதுவாக அவதானிகள் கூறிய போதிலும் சிலர்வேறுவிதமாக அபிப்பிராயப்பட்டார்கள். புலிகளைத்தவிரஏனைய சகல இயக்கங்களும் புதுடில்லியுடன் சேர்தது அடையாளங் காணப்பட்டுவிட்டபிறகு சிறிலங்காஅரசு கொழும்பில்மேற்படி இயக்கங்களின் நடவடிக்கைகளை சந்தேகத்துடனேயே பார்த்தது. ஆனால். ஈ. பி. டி.பியை அவர்கள் அப்படிப் பார்ப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு.எனவே கொழும்பில் பிரேமதாஸ அரசால் சந்தேகிக்கப்பட முடியாத ஓர் ஏஜன்ற் ஆக புதுடில்லி ஈ. பி. டி. பியை கொழும்பிற்கு அனுப்பியிருக்கலாம் என்பது மேற்படி அவதானிகளின் கருத்து.

அப்போதிருந்த பாதுகாப்பு மந்திரி ரஞ்சன்விஜயரெட்னாவும் கொழும்பிலிருந்த இந்தியாவுக்கு விசுவாசமான மற்ற இயக்கங்களை விட ஈ.பி டி பியை நமபத்தயாராக இருந்தார். தளப்பிரதேசமும் இல்லை.பின்தளப்பிரதேசமும் இல்லை என்றிருந்த தேவாரஞ்சனை நோக்கிச் சரியலானார். இப்படி, பிரேமதாஸ அரசுடன் ஆரம்பித்த உறவு இரண்டாவது ஈழபபோரோடு படிப்படியாக நெருக்கமடைந்து இன்று ஈ பி.டி.பி, இராணுவத்தில் உள்ள ஒரு தமிழ்ப் படைப்பிரிவு போல தொழிற்படும் அளவுக்கு வளர்ந்து விட்டிருக்கிறது.

கொழும்பில் மற்றைய இயக்கங்களை விட சலுகைபெற்ற ஒரு அமைப்பாக ஈ.பி.டி.பி காணப்படுகின்றது. பலாலியிலிருந்து ஒலிபரப்பப்படும் ''மக்கள் குரல்'' ஈ.பி.டி.பியின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது. தினகரன் வார மலரில் வெளிவரும் ''புல்லட் பொக்ஸ்'' ஈ. பி டி.பியுடன் தொடர்புடையது என்று கருதப்படுகிறது. மக்கள் குரலிற்காக் கோரப்படும் எந்த ஒரு உதவியையும் செய்து கொடுக்குமபடி சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு பிரேமதாஸ உத்தரவிட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. தினகரன் வாரமலரில் புல்லட் பொக்ஸ் ஒரு விதத்தில் இன்னொரு ஆசிரியத்தலையங்கம் போலவே வெளிவந்து கொண்டிருக்கிறது. சில சமயங்களில் தினகரன் ஆசிரியர் சிவகுருநாதனுக்கு வேண்டியவர்களும் புல்லட் பொக்ஸ்களில் தாக்கப்படுவதுண்டு. அப்பொழுதெல்லாம் அதைத் தடுக்கும் சக்தியற்றவராகவே சிவ குருநாதன் காண படுவாராம். மேலிருந்து வரும் ஆசிரியத் தலையங்கம் அது என்பதால் தினகரன் ஆசிரிப பீடம் அதில் தலையிடுவதில்லையாம்.

தீவுப்பகுதிகளில் சிவில் நிர்வாகம் ஈ. பி. டி. பியிடம் தரப்பட்டிருக்கிறது. வவுனியாவில் புளொட்டிற்கும் கிழக்கில் ரெலோவிற்கும் தரப்பட்டிருக்கும் அதிகாரங்களையும் சலுகைகளையும் விட ஒப்பீட்டளவில் அதிகமானவை தீவுகளில் ஈ. பி. டி. பிக்குத் தரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸ கொல்லப்படும் வரை ஈ பி.டி.பி கொழும்பில் அவருடைய செல்லப் பிள்ளை போலகாணப்பட்டது பிரேமதாஸதேவாவைத் தனதுதம்பிகளில்ஒருவர் என்று கூறிவந்தார் இன்னொரு தம்பி அஷ்ரப்)

பிரேமதாஸ சிங்கள ஆட்சிப் பாரம்பரியத்தைப் பொறுத்தவரை வேரற்ற ஒரு தலைவர் அவர் உயர் குழாத்தைச் சேர்ந்தவரில்லை. அவருடைய குடும்பப் பின்னணியும் பலமானது அல்ல. இந் நிலையில் தனது தனிப்பட்ட முயற்சிகளாலும், பேச்சு வன்மையாலும் மட்டும் ஜனாதிபதியாக உயர்ந்த அவர் உயர் குழாத்துடனான நிரந்தர முரண்பாடுகள்காரணமாக எப்பொழுதும் அதிகாரிகளிலும், ஆலோசகர்களிலும் சில தனிப்பட்ட உதவியாளர்களிலும் தங்கியிருந்தார். இதனால் அவருடன் ஆரம்பத்திலிருந்து காணப்பட்ட சில அதிகாரிகளுடனும் அவர் மிக நம்பிய சில ஆலோசகர்கள் ஊழியர்களுடனும் அவரது உறவு, நிர்வாக ரீதியிலானது என்பதற்குமப்பால் ஒரு தனிப்பட்ட உறவாகவே வளர்ச்சி கண்டிருந்தது. உயரதிகாரி பாஸ்கரலிங்கம், அந்தரங்க ஊழியர் மொகைடீன், ஆலோசகர் தயான்ஜெயதிலக போன்றோருடனான அவரது உறவு அநேகமாக தனிப்பட்ட விசுவாச நட்பாகவே மாறிவிட்டிருந்தது. இப்படித்தான் தேவாவுடனும் பிரேமதாச மிகவும் நெருக்கமானவராகி விட்டார். அவரை தம்பி என்று உறவு முறை சொல்லலானார். மக்கள் குரல் பிரேமதாசவை 'அண்ணன்' என்று அழைக்கலாயிற்று.

இந்த உறவுமுறைதான் ஈ.பி.டி.பியை இப்பொழுது சிக்கலில் மாட்டியிருக்கிறது. பிரேமதாசவிற்கு எதிரான உயர்குழாம் ஈ. பி டி. பி. கொழும்பில் ஆயுதங்களோடு சுதந்திரமாகத் திரிவதை சகித்துக் கொள்ளத் தயாராயில்லை. அவர்கள் ஈ பி டி.பி. யை பிரேமதாசவின் தனிப்பட்ட பரா ராணுவப் பிரிவு என்று வர்ணிக்கிறார்கள். முன்பு கறுப்புப் பூனைகள் மூலம் அவர் செய்தவற்றை பின்பு ஈ.பி.டி பி. மூலம் செய்து வந்தார் என்பது அவர்களது குற்றச்சாட்டு.ஈழப்போரைச் சாட்டாக வைத்துக் கொண்டு ஒரு தனிப்பட்ட பரா ராணுவப் பிரிவை பிரேமதாச பகிரங்கமாக வைத்திருந்தார் என்றே பெரும்பாலான சிங்கள எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் கருதுகின்றன.

கடந்த வருடம் அராலி வெளியில் தளபதிகள் கொல்லப்பட்ட சம்பவத்திலும் பிரேமதாஸ மீதான அவர்களின் வழமையான சந்தேகங்கள் ஒரு கட்டத்தில் ஈ.பி டி. பி. யின் மீது திரும்பின. இது விசயத்தில் ராணுவத்துள் ஒரு பகுதியினர் இப்பொழுதும் ஈ பி.டி.பி.யைத்தான் சந்தேகிக்கிறார்களாம் அடுத்தது லலித் கொல்லப்பட்டது. இக்கொலைபற்றியும் பிரேமதாஸவின் எதிரிகள் ஈ.பி.டி.பியைச் சந்தேகிக்கத் தொடங்கினார்கள். போதாக்குறைக்கு லலித் கொல்லப்பட்டபின்னர் மக்கள் குரல் அவர்களைக் கடுமையாகச் சாடியதும் பிரேமதாஸவின் எதிரிகளை மோசமாகச் சீண்டி விட்டது. இது ஈ.பி.டி.பியை திருகோணமலை வரை தள்ளிக்கொண்டு போய்விட்டிருக்கிறது.

எனினும், பிரேமதாஸ ஈ.பி டி.பியினர் முழுப் பேரையும் திருகோணமலைக்கு அனுப்பிவிடவில்லை. என்றும் சிறு தொகையினரை தனது தனிப்பட்ட பாதுகாப்பில் வைத்திருந்தார் என்றும் அவர் கொல்லப்பட்டபின்னர் இது வெளித்தெரியவந்ததாகவும் கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

ஈ.பி டி.பி.தவிர்க்க முடியாதபடி, பிரேமதாஸவின் அரசியலில் ஒரு பாகமாகிவிட்டது. சிங்களவர்களின் கட்சிப்பூசல்களிற்குள் குறிப்பாக பிரேமதாஸாவுக்கும் உயர்குழாத்துக்குமான மோதல்களில பந்தாடப்படும் ஒரு அமைப்பாக அது மாறியிருக்கிறது. கடந்த வாரத்திற்கு முதல் வாரம் ''சண்டே ஐலண்ட்'' ஈ.பி. டி.பி. யைத் தாக்கி ஒரு பத்தியைப் பிரசுரித்திருந்தது. பெயரை வெளியிட விரும்பாத ஒருவர் மேற்படி பத்தியை சிறப்பு நிருபர் என்ற பெயரில் எழுதியிருந்தார் (அநேகமாக தமிழர்?)

இப்பொழுது பிரேமதாஸ இல்லை. ஆனால் சிங்களவர் மத்தியில் அவரைப் பற்றியிருந்தசந்தேகங்கள் அவர் கொல்லப்பட்டதால் நீங்கிவிட்டன என்பதற்கில்லை. எனவே ஈ. பி. டி பி. யின் மீதான சந்தேகங்களும் தொடரத்தான் போகின்றன. தவிர பிரேமதாஸவின் மறைவோடு எழுச்சி பெற முயலும் சிங்கள உயர் குழாத்தின் பழிவாங்களிலிருந்து ஈ. பி. டி. பி. தப்பிவிடக்கூடிய சாத்தியங்களும் குறைவாகத்தான் காணப்படுகின்றன. எனினும் ஈழப்போர் தொடரும் வரை ஈ. பி. டி.பி. போன்ற அமைப்புக்களை அவர்கள் கைவிடப்போவதில்லை. ஆனால் பிரேமதாஸவைப் போல ''தம்பி'' முறை கொண்டாடுவதற்குமில்லை.

தமிழர்அரசியலில் தனக்கென தனிப்பட்ட பேரம் பேசும் சக்தியேதும் மற்ற நிலைதான் ஈ. பி. டி. பி. யை பிரேமதாஸவின் அரசியலிற்குள் நிபந்தனைகளின்றி வீழும் ஒரு நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. இது ஒருவிதத்தில் அவர்கள் சூளைமேட்டில் செய்த தவறை விடவும் பாரதூரமான ஒரு தவறாகவே இருக்கப்போகிறது.

## பள்ளிக் கூடங்கள்

# "நன்கொடை சேர்ப்பது ஓர் எழுதா யாப்பு"



யாழ். மத்திய கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் நகர்க் கொத்தணி அதிபருமான நா. க. சண்முகநாதபிள்ளையுடனான பேட்டி

க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்த திறமை வாய்ந்த மாணவர்கள் க. பொ. த (உயர்தரம்) வகுப்பில் அனுமதி கோரி நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள். சில கல்லூரிகள் 'அட்மிஷனுக்காக றேட்' நிர்ணயித்து பணம் சேர்க்கின்றன. ஆனால் இந்த நன்கொடை என்ற பூதம் ஆரம்ப வகுப்பு முதல் க, பொ. த. (உயர்தரம்) வரை ஏழை மாணவரின் காலை இடறி வருவது வருந்தத்தக்க விஷயம்.

**பேட்டி - மதன்**

பாடசாலைகள் நன்கொடை சேகரிப்பது குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன ?

அரசு பாடசாலைகளை எடுத்த பின்னர் நன்கொடை வாங்கும் பழக்கம் பிரபல பாடசாலைகளில் இருந்து வந்தது. அரசு பாடசாலைகளை கையேற்ற பிறகு செலவுகளை ஈடு செய்வதற்குத் தரப்படும் மானியம் போதாததால் தொடர்ந்தும் நன்கொடையை வசூலிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பாடசாலைகளுக்கு ஏற்பட்டது.

நன்கொடை வாங்குவதில் ஏதாவது ஒழுங்கைப் பின்பற்றுகிறீர்களா ?

பொதுவாக என்னைப் பொறுத்தவரையில் நன்கொடை வாங்கும்பொழுது இவ்வளவு தாருங்கள் என்று ஒரு குறிப்பிட்ட தொகையை கேட்டு வாங்குவதில்லை. எமது இல்லாமையை - பாடசாலைப் பிற கருமங்களுக்கு ஏற்படுகிற செலவை பெற்றோருக்கு விளக்கித் தன்னிச்சையான அன்பளிப்பைத்தான் நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் கட்டாயப்படுத்தி நன்கொடை வாங்குவது பொருத்தமானதாக எனக்குப் படவில்லை.

பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கான ஒரு முன்நிபந்தனையாக நன்கொடையைக் கருதலாமா? திரு. சபாநாயகம் கல்விப் பணிப்பாளராக இருந்த சமயம் பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிக்கும் போது, நன்கொடை வசூலிக்க வேண்டாம் என்று பணித்திருந்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

இதனை நான் முற்றாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், பிரபல பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதற்காகப் பெற்றோர்களே சிலவேளைகளில் நன்கொடை தர முன்வருகிறார்கள். இது அவர்களின் சுய விருப்பம். வசதியுள்ளவர்கள் வகுப்பறைகளைக் கட்டித் தருகிறார்கள். தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் கல்லூரி நூல் நிலையத்துக்கான நூல்கள் என அன்பளிப்புச் செய்கிறார்கள். வசதி குறைந்தவர்களிடம் நன்கொடைக் கோரிக்கைகளை அழுத்துவது விரும்பத்தக்கதல்ல.

நன்கொடை வசூலிப்பது கன்னங்கராவின் இலவசக் கல்வித் திட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் அடங்கியுள்ள "அனைவரும் கல்வி பெறும் உரிமை" ஆகியவற்றை மீறும் செயலாகக் கருதலாமா?

அனைவருக்கும் கல்வி என்பது சர்வதேச ரீதியாக வற்புறுத்தப்படும் காரியம் தான். ஆனால் நிலைமை இங்குவேறு மாதிரியாக உள்ளது. உதாரணமாக ஒரு கல்லூரியிலே வருடமொன்றுக்கு ஆகக்கூடியது ஒரு இலட்சம் ரூபா வரைதான். வசதிகள் - சேவைக் கட்டண வகையிலே செலவுசெய்யப்படுகின்றது. பிரபலபாடசாலைகளில் நடைபெறுகின்ற உதைபந்தாட்டம் துடுப்பாட்டம் மற்றும் நிகழ்ச்சிகளுக்குச் செலவைக்கணித்துக்கொண்டு போகிற போது பாடசாலை வரவு செலவுத் திட்டத்திலே பெரும் தொகையான பணம் துண்டு விழுகிறது. இதனைச் சமாளிப்பதற்காகத்தான் இந்தசுயேட்சை நன்கொடை முறை ஓர் எழுதா யாப்பாக நடைமுறையில்உள்ளது அந்த வகையிலே இப்படியான நன்கொடைகளை பெற்றோர்வழங்கும்போது அவற்றைப் பெற்றுத்தான் பிற கருமங்களைச் செய்ய முடிகிறது இது யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மாத்திரமல்ல யுத்தம் நடந்து கொண்டிருக்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் பொருந்தும். நன்கொடையைப் பயன்படுத்தி அரசினால் தடை செய்யப்பட்ட வெண் கட்டி, காகிதாதிகள், கரும்பலகை வர்ணம் ஆகியவற்றைத் தனியாரிடம் கூடிய விலை கொடுத்து வாங்கவேண்டியுள்ளது.

பாடசாலைச் செலவினங்களுக்கான மானியத்தை அரசிடம் கோரிப் பெறாமல், இந்தப் போராட்ட நிர்ப்பந்த காலத்தில் அந்தச் சுமையை ஏன் பெற்றோரின் மீதுசுமத்த வேண்டும் ?

அதிபர் ஒரு நிமிடம் அமைதி காத்தார். பாரதக் கதையில் பீஷ்மர் மீது கண்ணை மூடியவாறு அர்ச்சுனன் அம்பை ஏவியதுபோல்கண்களை மூடிக் கொண்டு கூறினார்:

இது முக்கியமான கேள்வி. கட்டடங்கள், கழிப்பறை, தளபாடங்கள் — இப்படியான விஷயங்களைத்தான் பள்ளிக்கூடங்கள் அரசிடம் பெறக் கூடியதாக உள்ளன. அப்படி அரசிடம் நிதி உதவி கோரினாலும் கூட, அரசு ஒதுக்கீடு செய்கிற நிதி எல்லாம் பாடசாலைகளுக்கும் தேவையான அளவுகொடுப்பதற்கும் போதுமானதாக இருப்பதில்லை. வசதிக் கட்டணத்தை இன்ன தேவைகளுக்குத்தான் செலவு செய்ய வேண்டும் என்றுசுற்று நிருபத்தில் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். (உ-ம்)விளையாட்டுக்கு 25 வீதத்தைத் தான் வசதிக்கட்டணத்தில் ஒதுக்கலாம். பிரபல பாடசாலைகளில் 15, 17, 19 வயதுக்கு உட்பட்ட மூன்று துடுப்பாட்ட அணிகளுக்கும் செலவு செய்வதற்கு மாத்திரம் வருடத்துக்கு ஒரு லட்சம ரூபா வரை தேவைப்படுகிறது. வசதிக் கட்டணத்திலிருந்து இதற்கான இந்தத் தொகையைப் பெறமுடியாது. விளையாட்டுக்குப் பிரத்தியேசமாக கல்வி அமைச்சு பணம் ஒதுக்கீடு செய்யாது. இந்த நிலையைச் சமாளிப்பதற்கு பெற்றோர் தாமாக விரும்பித் தரும் நன்கொடையைப் பெறவேண்டியிருக்கிறது. யாழ் மத்திய கல்லூரி அண்மையில் 125வது விழா கொண்டாட இருக்கிறது. இதற்கு அரசிடம் பணம் கேட்டால் தராது, பழைய மாணவரும், நலன் விரும்பிகளும் அன்பளிப்புத் தர வேண்டும் என்று கோரிக்கைவிட வேண்டி இருக்கிறது.

இந்தப் போராட்ட நிர்ப்பந்த காலத்தில் பெரும் காட்சிகளும், விழாக்களும் கல்லூரிகளுக்கு அவசியம் தானா ?

போராட்ட நிர்ப்பந்த காலத்திலும் எமது கலையையும், பண்பாட்டையும் முன்னெடுப்பதற்கான விழாக்கள் எடுக்கப்படுகின்றன. அதேபோல் பள்ளிக்கூடங்களில் பாரம்பரியத்தைப் பேணவேண்டிய கடப்பாடு பள்ளிக்கூட நிர்வாகஸ்தர்களுக்கும், பெற்றோர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் இருக்க வேண்டும் என நாம் கருதுகிறோம். பள்ளிக்கூடங்களிலே விழாக்கள் கொண்டாடும்போது தேசத்தைப் பற்றிய உணர்வுகள் மாணவர்களுக்கு ஊட்டப் படுவதை சகலரும் உணர்ந்திருக்கிறார்கள்.

நன்கொடை என்ற நிபந்தனையினால் முன்னணி அல்லது பிரபல பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்க்க முடிவதில்லை என்று வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெற்றோர் கருதுகிறார்கள் என்று கேட்ட போது -

அப்படிச் சொல்வதும் சரி. ஆனால் தனியார் கல்வி நிறுவனங்களில் (ரியூட்டறி) வசதி உள்ளவர்களும், வசதிஅற்றவர்களும் தமது பிள்ளைகளை அனுப்பிக் கல்வி புகட்டுகிறார்கள். ஆரம்பக் கல்வி முதல் க.பொ த (உயர்தரம்) வரை தனியார் பாடசாலைகளை நாடும் ஒரு முனைப்பு தற்போது இருப்பதைநீங்கள் அறிவீர்கள் தனியார் கல்லூரிப் படிப்புச் செலவைவிட பாடசாலை நன்கொடைச் செலவு குறைவானது.

தனியார் பாடசாலைகளில் மாதாந்தம்தவணை முறையில் பணம் அறவிடப்படுகிறது. ஆனால் அரச பாடசாலைகளில் ஒட்டுமொத்தமாக நன்கொடைப் பணம் அறவிடப்படுகிறது. ஏன் ?

பிரபல பாடசாலைகளில் அனுமதிபெறவேண்டும் என்ற ஆர்வத்தினாலேயே நகைகளை அடகு வைத்து, அல்லது கடன் பெற்று நன்கொடை கொடுத்து அனுமதி பெறுகிறார்கள். நீங்கள் கூறுகிறபடி ஒட்டுமொத்தமாக நன்கொடை வாங்குவதில் பெற்றோருக்குக்கஷ்டம்தான் எங்கள் பாடசாலையில் தவணைமுறையிலும்நன்கொடை பெறுகிறோம். இடம் பெயர்ந்த பிள்ளைகளிடம் நன்கொடை வாங்காமலேயே எனது பாடசாலையில் சேர்த்துக் கொள்கிறோம். மற்றும்படி எமது தேவையைப் பெற்றோரிடம் உணர்த்தியும் நன்கொடை பெறுகிறோம்.

நன்கொடை ஆசை சில சாதாரண பள்ளிக்கூடங்களையும் பீடித்திருப்பதால் அப் பள்ளிக் கூடங்களிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகளுக்குக்கதவடைக்கப்படுகிறது. இது பற்றி கூற முடியுமா ?

நீங்கள் சொல்வது உண்மை தான். பெரிய, சிறிய பாடசாலைகள் எல்லாவற்றிலுமே வெண்கட்டிகள், தளபாடங்கள் ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. எனது கொத்தணியில் பெரிய பாடசாலைகள் நன்கொடை வசூலிக்கிற மாதிரிச் சிறிய பாடசாலைகள் வசூலிப்பதில்லை. எனது கொத்தணியில் 5ஆம் வகுப்பு வரையுள்ள ஒரு பிரபல பாடசாலை உள்ளது. அந்தக் குறிப்பிட்ட பாடசாலையில் சேரவேண்டும் என்பதற்காகப் பெற்றோர் அன்பளிப்புச் செய்து பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள். மிகவும் வசதிபடைத்த பிள்ளைகள் தான் இங்கு படிக்கிறார்கள். வசதி குறைந்த பிள்ளைகளிடம் அவர்கள் வலுக்கட்டாயமாக நன்கொடை வாங்குவதில்லை.

நீங்கள் கூறும் அந்தப் பிரபல பாடசாலையில் வசதியுள்ள பெற்றோர் நன்கொடை வழங்கித் தமது பிள்ளைகளைச் சேர்க்கிறார். அப்படித் தானே ?

நீங்கள் கூறுவதை நான் முற்றாக மறுப்பதற்கில்லை. தேவையைப் பொறுத்துக் கூடுதலாகப் பணத்தைக்கொடுத்துச் சேர்க்கக் கூடிய சூழ்நிலைக்கு இந்த நன்கொடை காரணமாக அமைகிறது. இது முற்று முழுதாக நடைபெறுகிறது என்று கூறாவிட்டாலும். ஒரு சிறிய எண்ணிக்கையிலாவது அப்படி அனுமதிக்கத்தான் செய்கிறார்கள்.

கல்வி ஒரு வியாபாரப் பொருளாக(Salable Commodity) தற்போது மாறியுள்ளது என்று கருதலாமா ?

கல்வியை ஒரு வியாபாரப் பொருள் என்று சொல்வதற்கில்லை. பொதுப் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகம் தருவதில்லை. காரணம் தனியார் நிறுவனங்களில் சேர்ந்து படிப்பதிலேயே அவர்களுக்கு நாட்டம் உள்ளது. எந்த வழியிலும் போட்டி போட்டுக் கொண்டு 'வெட்டுப் புள்ளி'யை எடுப்பதற்குப்பிள்ளைகளே காசு கொடுத்துக் கற்க விரும்புகிறார்கள். இந்நிலை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, பிறமாவட்டங்களில் றோயல், ஆனந்தாக் கல்லூரி போன்ற பாடசாலைகளிலும் நன்கொடை கொடுத்துப் படிக்கிறார்கள்.

## நோய் இப்பொழுது மருந்து எப்பொழுது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் முன்புறம். காற்சட்டைக்காரர் ஒருவர் ''தயவுசெய்து கொஞ்சம் கருணை காட்டுங்களேன்'' என்று கெஞ்சிக் கொண்டிருந்தார்.

என்ன விடயமாக இருக்கும்?

ஆராவது அவருக்குத் தெரிந்தவர் நோயாளியாக சிகிச்சைக்களத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கக் கூடும். இவரிடம் பாஸ் இல்லாமையால் பார்ப்பதற்கு தவிப்பவராக இருக்கக் கூடும். கண்ணியம், கடமை என்பன தவறாதவர்களல்லவா, வெள்ளை உடுப்பு அணிந்தவர்கள்! வைத்திய அதிகாரிகள் முதல் நோயாளர் ஈறாக அனைவரது பெட்டிகளையும் சோதனை செய்யும் கடமை உணர்வு தவறாத இவர்களிடம் சிபாரிசுக்கு விண்ணப்பிக்க முடியாது அல்லவா! ஓரிடத்தில் தரித்து நிற்க முடியாமல் அங்குமிங்குமாக நடந்து திரிவதும், காற்சட்டையின் பொக்கட்டுக்குள் கையை விட்டு தொடையைச் சொறிவதுமாக அவர் அமைதியில்லாமல் தவித்துக் கொண்டிருந்தார். ஆனால் இவரது எதிர்பார்ப்பு சற்றுவித்தியாசமாக இருப்பதுபோல் பட்டது. அருகில் போனேன். ஆதரவாக ஏறிட்டுப் பார்த்து விழியாலேயே வினா தொடுத்தேன்.

'எனக்கு தோளில் ஒருவகை அரிப்பு எடுக்கின்றது. இரவில் நித்திரை கொள்ள இதனால் முடியவில்லை. ஆங்கு வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதிக்குச் சென்று காட்டினேன். அவர்கள் தோல் கிளினிக்கிற்கு றிவர் (Refer) பண்ணினார்கள். அங்கு அடுத்த 20ஆம் திகதி வரும்படி கூறினார்கள். அதுவரை நோய்க்கு என்ன நிவாரணம் தேடுவது என்றே தெரியவில்லை.' அவர் மெல்லிய குரலில் கூறினார். அனுதாபத்துடன் பார்ப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

- ஊர்க்குருவி

# ஜப்பானை தண்டிக்கும் தார்மீக பலம் மேற்குலகிற்குக் கிடையாது

**1948** டிசம்பர் 23. டோக்கியோ சுகாமோ சிறை முற்றம்; இரவு ஜப்பானிய போர்க்கால பிரதம மந்திரிகளாக இருந்த தட்சுவா. கிரோட்டா, கொரியாவிலிருந்த ஜப்பானிய படைகளின் பிரதம தளபதிஇடகாகி, ஜப்பானிய உயர்மட்ட ஜெனரல்கள் அமைப்பின் பிரதிநிதிகளான மட்சுயி. டயிகரா, கிமூரா, மூட்டோ ஆகிய எழுவர் தூக்குக் கயிறுகளின் முன் நின்றார்கள்.

"உலகின் மீது ஆதிக்கத்தை ஏற்படுத்தி உலகை சுரண்டும்" நோக்கத்தோடு ஜெர்மனி, இத்தாலி ஆகிய நடுகளுடன் சேர்ந்து சதி செய்ததாக பிரதான குற்றச்சாட்டு அவர்களுக்கு எதிராக இருந்தது.

இந்த ஏழு மனிதர்களின் சாவுக்காக இரக்கப்பட உலகில் எவருமே இருக்கவில்லை. சரியாகப்பார்த்தால். இருக்கத் தேவையுமில்லை. ஆனால். அதேநேரம் 'உலகின் மீது ஆதிக்கத்தை விரும்பாத நல்லவர்கள்', என்ற வேடத்தில் நின்ற, போரில் வென்ற வல்லரசுகளின் கூட்டு விசாரணை குழுவினரின் முகங்களையும், கைகளையும் பார்த்து உலகம் அருவருப்புப்பட்டது. ஏனெனில் அவை தூய்மையானவை அல்ல; கறைபடிந்தவை.

அன்றைய இரவுடன் இல்லாமற் போன இந்த ஏழு பேர் மீதும், இவர்களை விட ஆயுள் தண்டனை. மற்றும் நீண்டகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட 21 ஜப்பானிய அரச, படையக மேலாளர்கள் மீதும், விசாரிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை சற்று ஆழமாகப் பார்ப்போம்.

1. சர்வதேசங்களின் உரிமைகளை மீறி ஆக்கிரமிப்பு போர்களை திட்டமிட்டு நடாத்தியது.
2. சட்டவிரோத இராணுவ நடவடிக்கைகள் மூலம்மற்றைய நாடுகளின் இராணுவத்தினரையும், பொதுமக்களையும் கொன்று குவித்தது.
3. சர்வதேச சட்டங்கள், போர் வழக்கங்களை மீறி போர்க் கைதிகளையும், பாமர மக்களையும் சுட்டுக் கொன்றது.
4. மனிதாபிமானத்திற்கு விரோதமாக போர்க் கைதிகளையும், மற்றைய கைதிகளையும் மிருகத்தனமாக நடாத்தியது.

குற்றச் சாட்டுக்களின் பட்டியல் மிக நீளமாக இருந்தாலும் இந்நான்கு வகைகளுக்குள் தான் அடங்குகின்றது. இத்தகைய குற்றச்சாட்டுக்களின் முன்பு, ஜப்பானிய மேலாளர்கள் உண்மையில் மன்னிக்கப்பட முடியாதவர்களாகவே இருந்தார்கள். ஏனெனில் போரின் போது ஜப்பானிய இராணுவத்தினர் மிகவும் கடுமையாகவே நடந்து கொண்டார்கள்.

ஜப்பானிய சிறைகளில் ஆயிரக்கணக்கான போர்க் கைதிகள் இறந்து போனதும், ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் பொதுமக்கள் மீது மிருகத்தனமாக நடந்து கொண்டதும். ஜப்பானியர்களை சர்வதேச சமூகத்தின் முன் மன்னிக்கமுடியாத குற்றவாளிகளாக நிறுத்துகின்றன.

இந்தத் தண்டனை இவர்களுக்கு வேண்டியது தான். ஆனால் இதில் என்ன தவறு எனில், குற்றங்களுக்கான தண்டனையாக இது இல்லை. உண்மையில் இது போரில் தோற்றதற்கான தண்டனை; போரில் வென்ற நாடுகள் தோல்வி கண்ட நாடொன்றுக்கு வழங்கிய தண்டனை. ஏனெனில் மேலே சொல்லப்பட்ட குற்றங்களுக்கு போரில் ஈடுபட்ட பெரும்பாலான நாடுகள் ஆளாகி இருந்தன.

சர்வதேசம் என்றபோர்வையில், ஜப்பானியர்கள் மீது விசாரணையை நடாத்திய ஐரோப்பிய நாடுகளின் உண்மை உருவத்தைப் பார்த்தால், மிகவும் விகாரமாகத் தோன்றும்.

பிரிட்டனோ, பிரான்சோ, அமெரிக்காவோ, முன்னாள் சோவியத்தோ, இரண்டாம் உலகப்போரின் முன்போ,பின்போ ஆக்கிரமிப்புப் போர்களை நடத்தாதவர்களில்லை. அத்தகைய குற்றச்சாட்டில் இவர்களை விட ஜப்பானியர்கள் மேலானவர்கள். ஏனெனில் சில நாடுகளைத் தவிர்த்துப் பார்த்தால் பிரிட்டன்ஆக்கிரமித்திருந்த நாடுகளைத் தான், ஜப்பான் மீண்டும் ஆக்கிரமித்திருந்தது.

ஆக்கிரமிப்பை விடுத்து மற்றைய குற்றங்களைப்பார்த்தாலும் மேற்கூறிய நாடுகளில் எதுவும் நேர்மையாக இருக்கவில்லை. இவர்கள் எவரும் மனிதாபிமானத்தை பெரிதாக நினைத்து நடக்கவில்லை சட்டங்களையும் வழக்கங்களையும் கருத்திலெடுக்கவும் இல்லை.

குலோத்துங்கன்

தம்மால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் பிரிட்டனோ பிரான்சோ, சோவியத்தோ, அமெரிக்கர்களோ மனிதாபிமானத்தோடு நடந்ததாக வரலாறு இல்லை. பெரும் இனப்படுகொலைகளை நடாத்தியதிலும் இவர்கள் குறைவிடவில்லை.

பிரிட்டிசார்இந்தியாவிலும், இரஸ்யர்கள் போலந்திலும், பிரான்சியர்கள் வியட்னாமிலும், அல்ஜீரியாவிலும் என மிகப்பெரும் இனப்படுகொலைகளை நடாத்தி உள்ளார்கள். அமெரிக்கர்களைப் பொறுத்தவரை எந்த சட்ட வரைமுறைகளுக்கும் உட்படாத மிகப் பெரும் இனப்படுகொலைகளை நடாத்திய பெருமை இரண்டாம் உலகப் போரிலும் உள்ளது. அதன் பிற்பாடும் உள்ளது.

1945 ஆகஸ்ட் 6, கிரோசிமாவிலும். ஆகஸ்ட் 9,நாகசாகியிலும் அமெரிக்கர்களின் அணுகுண்டுகளால் போருடன் தொடர்பற்ற 4,47,000 நகரவாசிகள் அழிந்து போயினர். இந்த நடவடிக்கைகள் மூலம் மனித குலத்தின் முதலாவது எதிரியாக அமெரிக்கா தன்னை அடையாளம் காட்டிக்கொண்டது.

அந்த இரண்டு நகரங்களுமே புல், பூண்டுகளற்று அழிந்து போயின. இத்தகைய நிலையில் மனிதாபிமான மற்றுமனிதர்களைப் படுகொலை செய்தார்கள் என்று ஜப்பானியர்கள் மீது விசாரணை நடாத்த அமெரிக்கர்களை யாரனுமதித்தார்கள்?

1945 ஆகஸ்ட் 9, ஜப்பானியர்கள் அணுகுண்டுகளால் சிதறிப்போன மனிதர்களின் உடல்களை அடக்கஞ் செய்து கொண்டிருக்கையில் இரஸ்யர்கள் ஜப்பான் மீது பெரும் படை எடுப்பொன்றைச் செய்தார்கள். இப்படித்தான் இரஸ்யர்களின் மனிதாபமானம் இருந்தது. அநாகரிகம் மிக்க இந்த உலகத்தில் எங்கே நாம் மனிதாபிமானத்தைத் தேடுவது.?

பலமும், வல்லமையும் சந்தர்ப்பங்களும் தான்எல்லாவற்றையுமே தீர்மானிக்கிறது. உண்மையில் ஜப்பானிய மேலாளர்களுக்கான தண்டனை போரில் தோல்வி கண்டதற்காகவே ஒழிய வேறெதற்காகவும் அல்ல. சரி. பழைய கதையை விடுவோம்; நவீன நாகரிக உலகிற்கு வருவோம். நாங்கள் பார்க்கப்போவது ஜப்பானியர்கள் பட்ட பழைய காயம் ஒன்று அவர்களை வருத்தும் புதிய நிலையை.

இன்று சர்வதேச மக்களின் முன்பு ஜப்பான் தலைகுனிந்து நிற்கிறது. இங்கு தண்டனை வழங்குவதற்கு யாரும்இல்லை எவரும் நீதி வழங்க முடியாது; ஜப்பானியர்களின் மனச்சாட்சிகளைத் தவிர.

'போர்க்காலத்தில் ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்ட ஆசிய நாடுகளில் 2 இலட்சத்திற்கு அதிகமான பெண்கள் கட்டாயமாக பாலியலில் ஈடுபடுத்தப்பட்டார்கள், என்ற உண்மையே குற்றச்சாட்டு.

இந்த நாடுகளில் இன்னமும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த வயது முதிர்ந்த பெண்களின் புதிய குரல்கள் உலகின் இதயத்தை கசியச் செய்கின்றன.

ஜப்பானியர்கள் உலக மக்களின் முன்பு இன்று வெட்கப்பட்டு நிற்கிறார்கள். ஜப்பானிய பிரதமர் இதற்காக தன் மனவருத்தத்தை வெளியிட்டுள்ளார். எப்படிப் பார்த்தாலும் டோக்கியோ இந்தப் பெண்களிடம் மன்னிப்புக் கேட்கவோ, நட்டஈடு வழங்கவோ வேண்டி வரலாம்.

சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் இந்தப் பிரச்சினைக்கு கொடுத்த முக்கியத்துவம் தான், இந்தப் பெண்களின் வெற்றிக்குக் காரணமாகின்றது. ஆனால். இதில் வேறுகேள்விகளும் இருக்கின்றனது சர்வதேச செய்தி ஸ்தாபனங்களால் ஜப்பானுக்கு கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் ஏன் வேறு நாடுகளுக்கு இக்குற்றங்கள் தொடர்பாக கொடுக்கபட வில்லை. அந்த நாடுகள் இதனைச் செய்யவில்லையா?

இதொரு சிக்கலான பிரச்சினை. ஐரோப்பிய பிரசார சாதனங்களின் ஆதிக்கத்துள் மயங்கிப்போயிருக்கும் உலக மக்களால் விளங்கிக் கொள்ள முடியாத பிரச்சினை. ஆனால், போராடும் தேசம் ஒன்றைச் சேர்ந்த எங்களால் இதைப் புரிந்து கொள்ள முடியும். பொய்மைக்கு அப்பாலிருக்கும் உண்மையைத் தேடும் வல்லமை ஒரு புரட்சிகர போராட்டத்தை நடத்தும் எங்கள் தேசத்தவர்க்கு உள்ளது.

போர்க்காலத்தின் போது கட்டாய பாலியலில் பெண்களை ஈடுபடுத்தியமைக்காக ஜப்பானியர்கள் குற்றவாளிகளாகவே உள்ளார்கள ; அப்படி எனில், மற்றைய நாடுகளும் இதில் குற்றவாளிகளே.

இத்தகைய செயலுக்காக பாதிக்கப்பட்ட பெண்களுக்கு, ஜப்பான் நட்டஈடு வழங்குவது சரி எனில் வியட்நாமிய பெண்களுக்கு, அமெரிக்கர்கள் தம் நாட்டைவிற்றாலும்நட்ட ஈடு செலுத்த முடியாமலிருக்கும்.

சரி, அதைவிடுவோம்; ஜப்பான் தேசத்தின் மீதான இத்தகைய அழுத்தங்களுக்கு காரணமென்ன?


அதொன்றும் அதிசயமான இரகசியமல்ல; வெளிப்படையானது. உலகப்போரில் ஜப்பானியர்கள் தோற்றார்கள். ஆனால், அதன் பின்பு நடந்த பொருளாதார போரில் அவர்கள் வெற்றி அடைந்துவிட்டார்கள்.

அதுதான், அவர்கள்மீதான இத்தாக்குதலுக்கு காரணம். அமெரிக்கர்கள் தொடுக்கும் பிரசாரசாதனங்களின் போர் பழைய வடுவொன்றை கிளறுவதன் மூலம். ஜப்பானியர்களுக்கும் மற்றைய ஆசியநாடுகளுக்குமிடையிலான உறவை பிரிப்பதற்காக மேற்குலகம் எடுக்கும் தந்திரத் திட்டம். முடிவாகப்பார்த்தால், சந்தை வாய்ப்பை கைப்பற்றுவதற்கான சூழ்ச்சித் திட்டமாகவே இது இருக்கும்.

மற்றும்படி, மனிதாபிமானத்திற்கும் அமெரிக்கர்களுக்கும் எந்தவித தொடர்புமே இல்லை. ஏனெனில் அமெரிக்கர்களின் பொருளாதாரவளர்ச்சிக்கு காரணமே கருவிகளின் உற்பத்திதான். அதற்காக அவர்கள் நாடுகளின் உள்ளேயும், வெளியேயும் போர்களை உருவாக்கினர்; நடாத்தினர். உலகமக்களின் அழிவில் தங்கள் தேசத்தை கட்டிஎழுப்பினர்.

ஜப்பானியர்களுக்கு எதிராக குரல் எழுப்பும் ஐ.நா. சபையின் மனித உரிமை அமைப்புகளும், உலக பெண்கள் அமைப்புகளும், இதே குற்றங்களை சற்று அதிகமாகவேசெய்த மேற்கத்தைய வல்லரசுகளை நோக்கியும், தங்கள் நியாயத்தைக் கேட்கலாம்; அப்படி எனில்அதில்நியாயமிருக்கிறது

ஜப்பான் ஆக்கிரமித்திருந்த நாடுகளை நேச நாட்டு அணியினர் கைப்பற்றிவிட்டார்கள். ஜப்பானிய தீவுகள் வெள்ளை கடற்படையினரிடம் வீழ்ந்துவிட்டன. இன்னொரு புறமாக ஜப்பானிய எல்லையில் போருக்கு தயாராக சோவியத் படைகள் குவிக்கப்பட்டிருந்தன. போரைத் தொடரும் வல்லமை ஜப்பானியர்களிடம் இருக்கவில்லை; இன்று அல்லது நாளை அவர்கள் சரணடையலாம். இத்தகைய நிலையில் அவசர அவசரமாக ஜப்பான் மீது, அமெரிக்கர்கள் ஏன் அணுகுண்டை வீசினார்கள்?
அதற்கு காரணமிருக்கவில்லை. அணுகுண்டை பரீட்சித்துப்பார்க்க அமெரிக்கர்களுக்கு, ஆசிய நாடொன்று கிடைத்துள்ளதை தவிர வேறெந்த காரணமுமே இல்லை.




1) ஐந்து வெற்றுப் போத்தல்கள் (ஜாம் அல்லது நெல்லிரசம்) கொடுத்து ரூபா 25 பெறுவதுடன் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

2) மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1ஆம் பரிசு – சுவர்க் கடிகாரம்
2ஆம் பரிசு – எவர்சில்வர் வீட்டுப் பாவனைப் பொருள்கள்
3ஆம் பரிசு – மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்
மேலும் பத்து ஆறுதல் பரிசுகள்.

3) பின்வரும் இடங்களில் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.
1) ரேஸ்லைன் இன்டஸ்றிஸ்-14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.
2) அறிவகம் — சாவகச்சேரி.
3) சுபாஸ் பேக்கவுஸ் — நெல்லியடி.
4) சுந்தரம் அன் சன் — சுன்னாகம்.
5) சித்திவிநாயகர் நூல்நிலையம் — ஏழாலை மேற்கு, சுன்னாகம்,

TASTELINE INDUSTRIES (PVT) LTD.
14, SEENIAR LANE, JAFFNA.

(சி) 6617

# வட கொரியாவின் அணுஆயுத அரசியல்

**பாலகுமாரன்**

இன்று வரை மேற்குலக நாடுகட்கு என்றுமே புரியாத புதிராக வடகொரியா இருந்து வருகின்றது. "அது பலமாக இருந்தபோதும் சரி; தற்போது பலவீனப்பட்டுப் போயுள்ள நிலையிலும் சரி; அது என்ன நேரத்தில என்ன செய்யும் என்பதே விளங்காத பெரியசிக்கல்" என்கிறார் மேற்குலக இராசதந்திரிஒருவர் சோவியத் சீனாவில் ஏற்பட்ட மாற்றங்கள் வடகொரியப் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்தாலும் (அண்மையில் சீனாவும் "கையிலே காசு வாயிலே தோசை" என்கிற பாணியிலே வட கொரியாவோடு தனது வர்த்தக உறவுகளை வைத்திருக்க முடிவு செய்துவிட்டது.) இன்றுவரை வடகொரியா தனிமைப்பட்ட, மூடப்பட்ட தனது அரசியல் சமூக முறைமையை இறுக்கமாகப் பின்பற்றி வருவதே மேற்குலகிற்கு பெரும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. திடீரென இவ்வருடம் மார்ச் மாதம்12ஆம்திகதி வடகொரியா அறிவிப்பொன்றை வெளியிட்டு பெரும் பரபரப்பு அலைகளை உலகெங்கும் தோற்றுவித்தது. 1985 ஆம் ஆண்டு தான் கைச்சாத்திட்டிருந்த அணுவாயுத பரம்பலை தடுக்கும் உடன்பாட்டிலிருந்து தான் விலகுவதாக அது அறிவித்தது. இதைத் தொடர்ந்து சியோல், டோக்கியோ, பீக்கிங், வாஷிங்டன் என உலகத் தலைநகரங்களில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டது. தென்கொரியாவோ, வடகொரியா தன் மீது படை எடுக்கும் என அஞ்சி பெரும் போர்ஏற்பாடுகளைச்செய்தது கொரியப் பகுதியில் போர் மூளுமோ என அச்சம்தோன்ற உலகு மீண்டும் பனிப் பார் காலத்தில் நிலவிய இழுபறி நிலைக்குச் சென்றது அதுமட்டுமன்றி வட, தென் கொரிய இணைப்பு பற்றிய நம்பிக்கைகளும் ஓய்த்துப்போக இதுவரை காலமும் வடகொரியாவை தம் செல்வாக்குப் பரம்பலுக்குள் உட்படுத்த முனைந்த மேற்குலகிற்கும் அதன் நண்பர்களான தென்கொரியா ஜப்பான்,சீனாவிற்கும் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. இது இன்றைய நிலை.

## அமெரிக்காவிற்கு பெரும் அடி

வடகொரியாவின்இந்தமுடிவு ஆசியாவில் குறிப்பாக கிழக்காசிய, பசுபிக் பிராந்தியத்தில் தான் பேணிவர முயலும் சமநிலைக்கு பெரும் அடியாக இருப்பதை அமெரிக்கா உணர்கிறது. அதிலும் குறிப்பாக அமெரிக்கா இராணுவச் செல்வாக்கு பிலிப்பைன்சில் உள்ள இராணுவத் தளங்களை மூடியதாலும் இப் பகுதியிலிருந்து குறிப்பிட்டளவு அமெரிக்கஇராணுவத்தை மீளப் பெறுவதாலும் குறையும் இக் கட்டத்தில் இதுஅமெரிக்காவிற்கு மட்டுமன்றிஅதை நம்பியிருப்போருக்கும் தமதுமுன்னையநிலைகளை மீளாய்வு செய்ய நிர்ப்பந்திக்கும் செயலாக அமைந்து விட்டது. இதுவரை 153 நாடுகளை அணுவாயுத பரம்பலைத் தடுக்கும் உடன்பாட்டில் கைச்சாத்திட வைத்து (அண்மையில் தென் ஆபிரிக்காகூடக் கைச்சாத்திட்டு விட்டது.) ஐரோப்பாவில் ஒருவித சமநிலையை அணுவாயுதங்கள் குறித்துப் பேணிவரும் அமெரிக்காவால் ஆசியாவில் மட்டும் தனது 'அரசியலை' முழுமையாக நடாத்த முடியாமலுள்ளது. நீண்ட காலமாக - கார்ட்டர் சனாதிபதியாக இருந்த காலம் முதலே தென்னாசியப் பிராந்தியத்தை அணுவாயுதங்கள் அற்ற வெறுமைப் பகுதியாக்க அமெரிக்கா முயன்று வந்தபோதும் அது இற்றைவரை நிறைவேறவில்லை. இந்திய உபகண்டத்தில் இந்தியா - பாக்கித்தான் மோதலோடு ஆரம்பித்த அணுவ யுத இழுபறி மத்திய கிழக்கில அரபு - இசுரேலிய மோதல் பகுதிக்கும் பரவி இன்று கொரியப் பிராந்தியத்திற்கும் வந்து சேர்ந்துள்ளது.

## ஆசியாவில் அணுகுண்டு?

இந்தியா 1974ஆம் ஆண்டு மே மாதம் பொககாரன், ராஜஸ்தான் பாலைவனப் பகுதியில் தனது முதல் அணுசக்தி வெடிப்புப் பரிசோதனையை நிகழ்த்தி தனது அணுக்குண்டு தயாரிக்கும் வல்லமையை உலகிற்கு எடுத்துக் காட்டியது. அது மட்டுமன்றி தனது அணுச்சக்தி தொடர்பான நிலையங்களை பரிசோதனை செய்யச் சருவதேச அணுச்சக்தி நிறுவனத்திற்குத் தடை விதித்ததோடு இற்றைவரை அணுஆயுதப் பரம்பலைத் தடுக்கும் உடன் பாட்டில் கைச்சாத்திடவும் மறுத்து வருகின்றது. பாகிஸ்தான் இந்திய முன்னேற்றங்களைப் பார்த்துப் பதறியடித்து அரபு, மேற்குலக ஆதரவோடு பனிப்போர்க் கால கட்டத்தில் அணுக்குண்டு தயாரிக்கும் வல்லமையைப் படிப்படியாகப் பெற்று விட்டது. அதுமட்டுமன்றி தனது செயற்பாட்டிற்கு விபரீத விளக்கம் ஒன்றும்கொடுத்தது. "யுதர், கிறித்தவர், கம்யூனிஸ்ட்டுக்கள், இந்துக்கள் எல்லாம் அணுக்குண்டு தயாரிக்க முடியும் என்றால் ஏன் இசுலாமியர் தயாரிக்கக் கூடாது?" என வினாவை எழுப்பி இன்று இசுலாமிய அணுக்குண்டு தயாரிக்கும் வல்லமையைப் பெற்று விட்டது. பாக்கித்தானில் Kahuta எனுமிடத்தில் அதன் அணுவாயுத கூடம் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இன்று பாக்கித்தானின் அணுவாயுதங்கள் தயாரிக்கும் முயற்சியை முழுமையாக அம்பலப்படுத்தி பாக்கித்தானிற்கான தனது உதவிகளையும்நிறுத்தி 'நவீன நாயகனாக' நடிக்கும் அமெரிக்காவின் நிலை மிக்க வேடிக்கையானது. அணுவாயுதங்கள் தயாரிக்கும் வல்லமையைத் தாங்கள் பெற்ற பின் ஏனையோர் அதைப் பெறாது தடுக்க முயலும் இம்மேற்குலகம் இசுரேல் விடயத்தில் நடந்த விதம் பெரும் கேலிக்கு உரியது.

## மேற்குலகின் இரட்டைவேடம்

இசுரேல் தான் பிறந்தநாளிலிருந்தே அணு வல்லமையைப் பெற விடாமுயற்சியை மேற்கொண்டது. 1966ஆம் ஆண்டே இசுரவேல் அணுக்குண்டினை பகுதி பகுதியாக பொருத்தும் வேலையை மேற்கொண்டுவிட்டது. இன்றும் இசுரவேலின் Dimona அணுவாலைப் பகுதி பெருத்த மருமம் சூழ்ந்ததாகவே உள்ளது. ஆயினும் இசுரவேலுக்கு இற்றைவரை அணுவாயுதங்கள் தயாரிக்கத் தேவையான செறிவான யுரேனியம் மேற்குலகிற்கு தெரியாமல் திருடப்பட்டோ கடத்தப்பட்டோ கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் "கதைகள்" எல்லாம் எவ்வளவு பொய்யானவை என்று இன்று வெளியாகிவிட்டன. 1957-1967 இடையில் 500 இறாத்தல் செறிவான யுரேனியம் அமெரிக்காவிலிருந்து கடத்தப்பட்டதாக கருதப்படுவதோ அல்லது 1968ஆம் ஆண்டு 200 தொன் யுரேனியத்தோடு இசுரவேலுக்கு கடத்தப்பட்டதாக கருதப்படும் ஜெர்மனிய கப்பல் விவகாரம் பற்றிய செய்திகளோ அல்லது பிரான்சில் அதிரடி நடவடிக்கையொன்றை நடாத்தி 25 தொன் ட்ரக் வண்டியொன்றில் எடுத்துச் செல்லப்பட்ட செறிவான யுரேனியத்தை திருடியதோ அல்லது இவ்வாறாக இங்கிலாந்தில் இசுரவேலிய கமாண்டோக்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவுமே இசுரவேலின் 'வீரதீரச் செயல்கள்' அல்ல. அவையெல்லாம் திட்டமிடப்பட்டு முற்கூட்டியே தயாரிக்கப்பட்டு உலகை ஏமாற்ற நடத்தப்பட்ட பொய்நாடகங்கள் என்பதே அது. எனவே மேற்குலகின் இரட்டைவேடம் அம்பலமான இந்நிலையில் ஆசியாவில் தமது 'நீதியை' நிலைநாட்ட இவர்கள் எடுக்கும் முயற்சிவெற்றிபெற வாய்ப்பேயில்லாமலுள்ளது.

## மேற்குலகின் கவலை

ஆனால் இதிலுள்ள துயரம் என்னவென்றால இல்லானுக்கும் - இருப்பவனுக்கும் உள்ள மோதலாக இதனைச்சித்தரிப்பதன் மூலம் அணுவாயுதங்களின் பேரழிவுகளை மனித குலத்தின் கவனத்திலிருந்து மறைக்க எடுக்கும் முயற்சியாக இவை அமைவதுதான். ஏனென்றால் 1945 கிரோசிமா-நாகசாக்கியில் ஏற்பட்ட கொடூர அழிவுகள் அல்லது ருஷ்யாவின் செர்னோபில் அணுவாலைக் கசிவால் ஏற்பட்ட தொடர் அனர்த்தங்கள் எல்லாம் இவ்வல்லாண்மை நாடுகளின் போக்கினை மாற்றவில்லை. எனவே இன்று மத்திய கிழக்கில் இசுலாமிய அடிப்படைவாத நாடான ஈரான், முன்னாள் சோவியத்தின் மத்திய ஆசிபக் குடியரசுகளின் உதவியோடு 8-10 வருடங்கட்குள் அணுவாயுதங்களைக் கொண்டிருக்கும் என்ற செய்தி என்ன முக்கியத்துவத்தைப் பெறப்போகின்றது?எனினும் இசுலாமிய அடிப்படைவாதம் தமது நலன்கட்கு எதிராக இருப்பதன் அடிப்படையில் மேற்குலக நாடுகள் கவலை கொண்டாலும் ஈரானோடான வர்த்தக உறவுகளைக் கைவிட மேற்குலகம் தயாராக இல்லை.

அதுபோலவே மேற்குலக சந்தைக்காக திறந்து விட்டிருக்கும் இந்தியா சீனாவின் பரந்த சந்தை வாய்ப்பினைக் கருதியும் இவர்களது அணுவாயுத செயற்பாடுகளை கண்டிப்பதோடு மேற்குலகம் நிறுத்திக் கொள்கின்றது.

## வடகொரியாவின் இன்றைய நிலை

இவையெல்லாம் பின்னணி. இன்று முன்னைப் பிரச்சினை வடகொரியாவை என்ன செய்வது என்பது தான். ஏனென்றால் மேற்குலகிற்கு இன்று தலை போகிற இரு விடயங்களாக பொஸ்னியச் சிக்கலும், முன்னாள் சோவியத் சிக்கல்களும் முதன்மை பெறுவதால் இவ்விடயத்தில் முழுக் கவனத்தையும் உடன் செலுத்த முடியாமலுள்ளதாக கருதப்படுகிறது. அல்லாவிட்டால் இசுரவேல் 1981-ம் ஆண்டு ஈராக்கின் Osirak அணுவாலையை தாக்கி அழித்தது போல் வடகொரியாவில் தலை நகரான 'பியாங்யாங்கிலிருந்து 90 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள Yongbyon அணுவாலைப் பகுதியை தாக்க ஏதேனும் திட்டத்தை இவர்கள்வகுக்கலாம். ஆனால் வட கொரியாவோடு மோதலை ஆரம்பிப்பதன் விளைவுகளை அதாவது இன்னொரு கொரியப் போரை சந்திக்க எவருமே விரும்பார் என்பதே உண்மை. எனவே இற்றை வரை சருவதேச அணுசக்தி நிறுவனத்தின் பரிசோதனை முயற்சிகளை தடுத்து வரும் வடகொரியத் தலைவராக இருந்த கிம் இல் தங்கோ அல்லது அவரது மகனான கிம் யோங்கில்லோ (Kim Jong IL) அநேகமாக அணுக்குண்டை தயாரிக்கும் அதனைக் காவிச் செல்லும் ஏவுகணைகளை தயாரிக்கும் இறுதிக் கட்டத்தினை இப்போது அடைந்திருப்பது என்று நம்பப்படுகின்றது. அந்தோடு வடகொரியாவின் இராணுவமும் அதன் ஏனைய பலதுறை சார்ந்த பலத்தையும் குறைந்து மதிப்பிடவும் முடியாது. யேன்ஸ் பாதுகாப்பு வாராந்த இதழில் (Janes Defence Weekly உலகின் மூன்றாவது மிகப் பெரிய வேதியல் (Chemical arsenal) அழிவு கருவிகளை தயாரிக்கும் தொழிற்சாலை வடகொரியாவிலிருப்பதாக குறிப்பிடுகின்றது. அதைவிட 1000 தொன்னுக்கும் மேற்பட்ட நச்சுவாயுக்கள் Nerve & mastard gases) தொகுதி இருப்பதாகவும் கருதப்படுகிறது. மேலும் 13 வெவ்வேறு வித உயிர்கொல்லி Biological weapons) ஆயுதங்களும் ஏராளமாக இங்கு குவிக்கப்பட்டிருப்பதாகவும் நம்பப்படுகிறது. எனவே தனது அணுவாலை நிலைகளை பரிசீலிக்க எவரையும் விட கொரியா அனுமதிக்குமா என்பது ஐயத்திற்குரியதாக கருதப்படுகின்றது. அவ்வாறு அனுமதிக்கப்பட்டாலும் அம் முயற்சிகளால்பெரிதும் பயன் விளையுமா என்பதும் சந்தேகம் தான். ஏனென்றால் சுரங்கங்கள் தோண்டுவதில் உலகப் புகழ் பெற்ற வட கொரியர் சங்கிலித் தொடர் போன்று பல சுரங்கப் பேழைகளில் புளூட்டோனியத்தை மிக்க இரகசியமாக மறைத்து வைத்திருப்பதாக கருதப்படுகிறது.

(8ஆம் பக்கம் பார்க்க)

# "ஸ்கொட்லண்ட் யார்ட்"

"நீலப் பிசாசுகள்" "பச்சை நண்டு உண்ணும் கூட்டம்" "பீலின் இரத்த வெறிக்கூட்டம்" இவை உலகப் புகழ் பெற்ற ஸ்கொட்லண்யார்ட் பொலிசாருக்கு ஆரம்பகாலத்தில் இருந்த மட்டப்பெயர்கள். படிப்படியான செயற்பாடுகள் மூலமே இப்பட்டப் பெயர்களை அவர்களால் நீக்க முடிந்தது. சிறிலங்காவின் முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமாகிய லலித் அத்துலத் முதலியின் கொலை தொடர்பான விசாரணைக்கென சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் லண்டனிலிருந்து அழைக்கப்பட்ட ஸ்கொட்லண்ட்யார்ட் குழுவினர் ஆர். பிரேமதாசாவின் கொலை நடக்கும் பொழுது கொழும்பிலேயே இருக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஸ்கொட்லண்ட்யார்ட் (Scotland Yard) என்பது இங்கிலாந்திலுள்ள ஒரு சிறிய இடத்தின் பெயராகும். எட்கார் என்னும் இங்கிலாந்தின் அரசன் ஸ்கொட்லண்ட் அரசன் நீத் என்பவருக்கு லண்டன் வரும்போது தங்குவதற்கு என மாளிகை அமைக்க கொடுத்த இடம்தான் ஸ்கொட்லண்ட்யார்ட். அப்பொழுது (959-975ஆண்டு) இங்கிலாந்தையும் ஸ்கொட்லண்ட் மன்னரே ஆண்டுவந்தார்.

இங்கிலாந்தினால் ஸ்கொட்லண்ட் வெற்றிகொள்ளப்பட்ட பின்னர் (1173-74) இந்த இடம் இங்கிலாந்தினால் மீளப்பெறப்பட்டது. பின்னர் இந்த மாளிகை கவனிப்பாரற்றுச் சிதைந்து போக ஸ்கொட்லண்ட்யார்ட் எனும் இப்பகுதி இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அரசாங்க அதிகாரிகள் தங்கும் கட்டடங்கள் அமைக்கப்பட்டன இங்கு புகழ்பெற்ற கவிஞர் மில்ரன் உட்பட பலர் வசித்துள்ளனர் இருப்பினும் லண்டன் பொலிஸ தலைமையலுவலகம் இங்கு அமைந்த பின்னரே (1662) ஸ்கொட்லண்ட்யார்ட் என்ற பெயர் பிரபல்யமாகத் தொடங்கியது. ஆரம்பத்தில் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிசார்,சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் வேலையில் ஈடுபடுவதைவிட தெருக்கள் அமைத்தல் தெருக்கூட்டுதல்,வீதிகளுக்கு விளக்கு அமைத்தல் போன்றவற்றிலேயே அதிகம் ஈடுபட்டனர். பின்னர் 1829இல்தான் சம்பவங்களை தொகுத்து பாதுகாத்தல் புலனாய்வு செய்தல் என்பவற்றில் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிசார் ஈடுபடத்தொடங்கினர். ஆரம்பத்தில் லண்டனைச் சூழவுள்ள ஒரு சதுரமைல் பரபபுள்ள பகுதியிலேயே இவர்களின் செயற்பாடு அமைந்திருந்தது. பின்னர் 1829இல் ஸ்கொட்லண்ட்யார்ட்டின் கண்காணிப்பின் கீழ் 120 சதுரமைல்கள் வந்தன. 1000 பேரளவில் பொலிஸ்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். நாளடைவில் கட்டடங்கள் விரிவுபடுத்தப்பட்டு நகர்த்தப்பட்டபோது இவர்களின் அலுவலகங்கள் அமைந்த இடங்கள் ஸ்கொட்லண்ட்யார்ட் என அழைக்கப்படலாயின.

ஸ்கொட்லண்ட்யார்ட் தலைமைப்பீடம் ஆறு பகுதிகளை கொண்டது இவற்றில் போக்குவரத்துகண்காணிப்பு, குற்றப்புலனாய்வு என்பனமுக்கிய இடத்தைப்பெறுகின்றன. சிக்கலான லண்டன் போக்குவரத்தை சீர் செய்பவர்களாக போக்குவரத்து கண்காணிப்பு பகுதியினர் காணப்பட்டனர்.

குற்றப் புலனாய்வுப் பகுதியினர் எல்லா வகையான குற்றச் செயல்களையும் புலனாய்வு செய்பவர்களாக செயற்பட்டனர். ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிசார் பொதுவாக தடயங்களைக் கொண்டு குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் முறையினைக் கையாள்பவர்களாக காணப்படுகின்றனர். இவர்களிடம் குற்றவாளிகள் பற்றிய தகவல்களை சேகரிக்கும் பகுதி, கைரேகைப் பகுதி, புகைப்படப்பகுதி அத்துடன் சிறந்த நவீன ஆய்வு கூடவசதி என்பன காணப்படுகின்றன.

எழுபதுகளில் ஸ்கொட்லாண்ட் யார்ட் புதிய 20 மாடிக் கட்டடத்திற்கு இடம்பெயர்ந்தது.

# பம்பாய் குண்டு வெடிப்பும் ஹிந்தித் திரையுலகமும்

பம்பாயில் 300 பேர் பலியான சங்கிலித் தொடர் குண்டு வெடிப்புக்கு காரணமானவர்களுடன் தொடர்பு இருப்பதாக பிரபல இந்தி நடிகர் சஞ்சய் தத் கைதானதை தொடர்ந்து மேலும்பல இந்தி சினிமா நடிக நடிகைகளுக்கும் தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது.

இவ் வெடிகுண்டு தாக்குதலுக்கு தலைமை தாங்கியதாகக் கருதப்படும் தாவூத் இப்ராஹிம்மின் மகனின் பிறந்த நாள் விழா அவனது சொந்த நாடான துபாய் நாட்டில் கொண்டாடப்பட்டபோது பிரபல இந்திப் பட இசையமைப்பாளர் இசையமைத்த பாடலுக்கு பம்பாயை சேர்ந்த பல முன்னணி நடிகர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்திருந்த வீடியோ கசட்டில் இருந்து பல தகவல்கள் தெரியவந்துள்ளன.

அதேவேளை அந்த விழாவில் கலந்து கொண்ட நடிகர்கள் யார் யார் என்பதை வெளியிட மறுத்துள்ள பம்பாய் பொலிசார் வீடியோ கசட்டை தமது பாதுகாப்பில் வைத்திருக்கிறார்கள்.

இதேவேளை இந்த குண்டு வெடிப்புக்கு காரணமான மேமன் சகோதரர்கள் பாகிஸ்தானுக்கு தப்பியோ விட்டார்கள் சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்ட கடத்தல் மன்னன் தாவூத் இப்ராஹிம் அவனது சொந்த நாடான துபாய்க்கு தப்பியோடிவிட்டான். இந்தியாவை உலுக்கிய இந்த குண்டு வெடிப்பிற்கு காரணமான இவர்களை பிடிக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த நாச வேலை தொடர்பாக 80க்கும் மேற்பட்டவர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

பொலிசாரின் விசாரணையில் இருக்கும் சஞ்சய்தத்தை தொடர்ந்தும் அவர்கள் விசாரித்து வருகின்றார்கள்.

பொலிசாரின் விசாரணைகளில் தாவூத் இப்ராஹிம் முக்கும் இந்தி கவர்ச்சி நடிகை மந்தாகினிக்கும் தொடர்பு இருந்தது தெரியவந்துள்ளது. நடிகை மந்தாகினி ரஜ்கபூர் தயாரித்த ''ராம்தேரி கங்கா மைலி'' என்ற படத்தில் கவர்ச்சி காட்டி நடித்து புகழ்பெற்றவராவார்.

இவருக்கு இன்னும் திருமணமாகவில்லை ஆனால் ஆறு மாதத்திற்கு முன்பு ஆண் குழந்தை ஒன்றுக்கு தாயான இவர், குழந்தைக்கு தந்தை யார் என்பதை இரகசியமாக வைத்திருந்தார். ஆனால் துபாயில் தலைமறைவாக வசிக்கும் தாவூத் இப்ராஹிம் தான் மந்தாகின்பெற்ற குழந்தைக்கு தந்தை என்பதுதெரிய வந்துள்ளது.

இதேவேளை மந்தாகினியிடம் விசாரணை நடத்திய பிறகே அவர் கைது செய்யப்படுவாரா மாட்டாரா என்பது தெரியும் என்று உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நடிகை மந்தாகினி பெங்களூர் பன்னர் கட்டா ரோட்டில் உள்ள ''மை கோலே அவுட்'' என்ற காலனியில் வசித்து வந்தார். 12ஆம் திகதி பம்பாயில் குண்டு வெடித்ததும் இவர் வீட்டை காலிசெய்து சென்று விட்டார். அவர் எங்கு சென்றார் என்பது மர்மமாக இருந்தது. இவர் வெளிநாட்டுக்கு தப்பி ஓடிவிட்டார் என்றும் கூறப்பட்டது. இதற்கிடையில் நடிகை மந்தாகினி பம்பாயில் வசித்து வருவதாக வேறொரு தகவல் தெரிவிக்கின்றது.

அண்மையில் அவரைபொலிசார் பந்ரா பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். அவருடன் அவரது தாயாரும் சென்றார். என வேறொரு தகவல் குறிப்பிடுகின்றது.

மந்தாகினியிடம் பொலிசார் 30நிமிடம் துருவித்துருவி விசாரணை நடத்தினார்கள். இதேவேளை தாவூத் இப்ராஹிம் மின் நெருங்கிய கூட்டாளியான பிலூக்கான் கடந்த மாதம் தப்பியோடிய போது இவன் தப்பி ஓடுவதற்கு பயன்படுத்திய கார் நடிகை மந்தாகினியின் வீட்டின் முன்புறம் நிறுத்தப்பட்டிருந்தது இது குறித்தும் பொலிசார் விசாரிக்கிறார்கள்.

கதாநாயக நடிகர் கோவிந்தா வீட்டிலும் பொலிசார் சோதனை நடத்தியதாக பம்பாய் பத்திரிகைகளில் செய்தி வெளியாகி உள்ளது. ஆனால் இதை பொலிசார்உறுதி செய்யவில்லை.

இதேவேளை சமீபத்தில் துபாய் சென்று திரும்பிய நடிகர் திலீப்குமாரையும் சம்பந்தப்படுத்தி செய்திகள் வெளியாகின. ஆனால் இதனை திலீப்குமார் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த முன்னாள் மந்திரிகள் மூன்று பேர் மேமன் சகோதரர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தமை தெரியவந்துள்ளது. இது தொடர்பாகவும் விசாரணை நடக்கிறது.

குண்டு வெடிப்புகளுடன் தொடர்புடையவர்களெனச் சந்தேகிக்கப்படுவர்களுடன் நடிகர் நடிகைகளுக்கு தொடர்பு இருப்பதாக தெரிய வந்ததைத் தொடர்ந்து பம்பாய் சினிமா பட உலகம் ஸ்தம்பித்துப் போய் உள்ளது. அத்துடன் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் கூட்டம் குறைந்து வெறிச்சோடி காணப்படுகின்றது.


## அறிவித்தல்

தொழில் திணைக்களத்தின் ஆதரவுடன் மேசன் பயிற்சி வழங்கவுள்ளோம். எனவே பயிற்சி பெற விரும்பியோர் எமது சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்/ மாவட்ட
சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்
இல: 10, ஐயனார் கோவில் வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்

(4865)

கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்.

## லொறிக் கூலிக்கான கூறுவிலை

கொழும்பிலிருந்து நல்லூர் பூநகரிவரை பொருட்களை ஏற்றுவதற்கான கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் லொறி உரிமையாளர்கள் 20 05 1993 ஆம் திகதிக்கு முன்னர் பொது ''முகாமையாளர், கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர். (சி 6616)

நற்சமுக நடு நிலையம்

## கருத்தரங்கு

பொருள்: ''இன்றைய உலகில் கணனி'' (கொம்பியூட்டர்)
காலம்: 15-5 93 சனி, காலை 9 00 மணி.
பேச்சாளர்கள்: திருமதி அருந்ததி ஞானராஜா்
கலாநிதி எஸ். மகேசன்
யாழ்ப்பாணம்/பல்கலைக்கழகம்
இடம்: 115, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் கணனி ஆர்வலர் ஒன்றியமும், கணனி நூல் நிலையமும் ஆரம்பித்தல் பற்றியும் ஆராயப்படும்.

அனைவரும் வருக!

திரு அ சந்தியாப்பிள்ளை,
பொதுச்செயலர்.
[4838]

## B.A. 94

பேராதனை பல்கலைக் கழகம்

விரிவுரைகள் ஆரம்பம் 22.5.93
காலை 10மணி

விபரங்களுக்கு:
எஸ். அருள்நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/6611)


## கொழும்பை

குடும்பத்தின் சார்பில் திருமதி ஹேமா பிரேமதாஸ நன்றி தெரிவித்துப் பேசினார். அது நன்றி கூறிய பேச்சாக மட்டும் இருக்கவில்லை. நாட்டு மக்களிற்கு, மறைந்த பிரேமதாஸவின் தொடர்ச்சியாக அவரது விதவை மனைவி அரசியலில் ஈடுபடப் போகிறார். என்ற செய்தியை அறிவித்த பேச்சாகவும் இருந்தது. திட்டமிடப்படாத விதத்தில் திருமதி பிரேமதாஸ நன்றியுரை ஆற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் வீரசிங்க மல்லிமாராச்சி என்றுகூறப்படுகின்றது.

முன்னிரவு.சுமார் 7.40மணியளவில்மிகப்பகட்டாக அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான சிதைக்கு பிரேமதாஸவின்மருமகன் றோகான் ஜெயக்கொடி கொள்ளி வைத்தார்.

சுதந்திர சதுக்கத்தில் சிதை நெருப்பு மூண்டெழுந்தபோது ஊரடங்குச் சட்டத்திலிருந்து எழுந்து வந்த நிலவு-புத்தர் பிறந்த போதும், அவர் ஞானம் பெற்ற போதும் பின்னர் பரிநிர்வாணம் அடைந்த போதும்உதித்த அதே வைகாசி நிலவு-அச்சத்தால் விறைத்துப் போயிருந்த கொழும்பின் தெருக்களை, சலனமின்றி கடந்து சென்றது.


பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக்
கழக வெளிவாரிப்
பட்டப்படிப்புகள்

G,A.Q 1994 ஏப்ரல்
B. A 1994 ஏப்ரல்

பொருளியல்
S. வரதராஜன்
B.A. (Hons.)

ஆரம்பம்: 16.5.93
ஞாயிறு 1. 00 p.m
(சி/6609)


## வடகொரியா

எனவே முற்றிலும் தனிமைப் படுத்தப்பட்ட வட கொரியர் தனது உயிர் வாழ்தலுக்கு அணுக்குண்டையே இறுதிவழியாக நம்பியிருப்பதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### சீனாவின் தந்திரம்

எனவே வழமைபோல மேற்குலகம் ஐ நா. வின் பாதுகாப்பு சபைக்கு இவ்விவகாரத்தை இப்போது பாரப் படுத்தியுள்ளது. இந் நிலை தொடர்ந்தும் நீடித்தால் இதனைஅதாவது வடகொரிய மறுப்பை ஒருமோசமான முன்மாதிரியாக ஈராக் ஏனைய மத்திய ஆசியக் குடியரசுகள் பின்பற்றலாம் என்ற அச்சமும் இப்போது ஏற்பட்டுள்ளது. இதனால் வட கொரியாவிற்கு எதிராக ஐ. நா. பொருளாதாரத்தடையை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தப் படுகின்றது. ஆயினும எவ்வித நடவடிக்கையும் இவ் வருட அரைப்பகுதிக்குப் பின்னரே பாதுகாப்பு சபையால் எடுக்கப்படமுடியும் என்றே கருதப் படுகின்றது. ஏனெனில் தனது பழைய நண்பனான வட கொரியாவைப் பற்றி நன்கு அறிந்திருக்கும் சீனாவோ, பொருளாதாரத் தடை விதிக்கப்படுவதை விரும்பவில்லை. மேலும் மேலும் வட கொரியாவை மூலைக்குள் தள்ளுவது ஆபத்திலேயே முடியும் என சீனா கூறுகின்றது. இதனால் மேற்குலகம் சீனாவைஇவ்விடயத்தில் தலையிட்டு சுமுகமான முடிவை கொண்டு வருமாறு வெகுவாக நிர்ப்பந்திக்கின்றன. ஆனால் சீனாவோ எப்போதும் போல் தன்நலமே பொதுநலமாக கருதிதனக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள பிரச்சினைகளை (1. தைவானுக்கு F-16ரக விமான விற்பனை 2. அமெரிக்காவிலிருந்து ஆகக்கூடிய வர்த்தக சலுகைகளைப் பெறல்) தீர்க்க இதையொரு வாய்ப்பாகபயன்படுத்தி பேரம் பேசுகின்றது.

வட கொரியாவோ தன்னை எல்லா முன்னாள் சோசலிச நண்பர்களும் கைவிட்ட நிலையில் பொருளாதார இடர்களை எதிர்நோக்குகின்றது. இதனால் இவ் அணுவாயுத விவகாரத்தை தனது துருப்புச் சீட்டாக மேற்கிலிருந்து கூடிய பொருளாதார உதவிகளைப் பெற- மேற்கோடு உயர்மட்ட பேச்சுக்களை ஆரம்பிக்க தென் கொரியாவிற்கான அமெரிக்க இராணுவ உதவிகளை குறைக்கப் பயன்படுத்த விழைவதாக மேற்குலகம் எண்ணுகிறது. எதுஎவ்வாறு இருந்தாலும் தனது மார்ச் மாத அறிவித்தல் மூலம் ஆசியப் பகுதியை ஒருவகை அணுவாயுத நெருக்கடியொன்றுக்குள் வட கொரியா தள்ளிவிட்டுள்ளது. தனக்கொரு நீதி பிறர்க்கொரு நீதியென்றுசெயற்பட்ட அமெரிக்கா உட்பட்ட மேற்குலகின் கையறு நிலையையும் இச்செயல்புலப்படுத்திவிட்டது.

கோட்பாடுகள். மனிதாபிமானக் கருத்துக்கள் எல்லாம் எவ்வாறாக இருந்தாலும் வல்லமையுடையவராக இருத்தலே இன்றைய உலகின் யதார்த்தம் என்பதை வட கொரியா தெளிவாகப் புரிந்துள்ளது. இதனாலேயே தென் கொரியா கூட இவ் விவகாரத்தை மென்மையாக படிப்படியாக கையாளுவதே நல்லது எனக்கருதுகிறது. ஒரேயடியாக வட கொரியாவை அழிவை நோக்கி தள்ளி அதனாலே கிழக்கு சேருமனியில் ஏற்பட்டதுபோன்றதொரு நிலை ஏற்படுவதை தென் கொரியா தான் விரும்பவில்லை என்கிறது. ''இப்போது போர் எல்லைகள் தெளிவாகவரையறுக்கப்பட்ட ஒரு விபரீத விளையாட்டு இது'' என்கிறார் சீன ஆய்வாளர் ஒருவர். எனவே ''அணுவாயுத வல்லமை கொண்ட வட கொரியாவோடு உலகம் வாழப் பழகிக்கொள்வதே எதிர்கால நல்வழி'' என்கிறார், இன்னுமொரு ஆய்வாளர். எது எப்படியிருந்தாலும் இவ் அணுவாயுத விளையாட்டுக்கள் இறுதியில் வினையாக மாறக் கூடாது என்பதே மனித குலத்தின் ஒரே கவலையாகும்.

### பதவி உயர்வு

அரசசேவையில் உள்ள எழுதுவினைஞர்களுக்கும் அதனோடு இணைந்த தரங்களில் கடமையாற்றும் பட்டதாரிகளுக்கும்பதவிஉயர்வுவழங்க சந்தர்ப்பம் அளிக்கப்படும் என பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 1 லட்சம் ஊழியர் தேர்தல் பணியில்

எதிர்வரும் திங்களன்று நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் சுமார் ஒரு லட்சம் அரச ஊழியர்கள் பணியில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வாக்குச்சாவடிகளில் 90 சதவீதமானவை அரச பாடசாலைகளிலேயே அமைந்துள்ளது. இவ்வாறு 2,198 வாக்குச்சாவடிகள் 7 மாகாணங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

# கொழும்பைக் கலக்கிய ஆறு நாட்கள்

கிருலப்பனையில் அத்துலத் முதலி கொல்லப்படுகையில் அங்கு பொலிஸ்காரர் எவரும் காணப்படவில்லை. பின்னர் எதிர்க்கட்சிகள் இதை ஒரு முக்கிய குற்றச்சாட்டாக முன்வைத்தன.

ஆனால் எட்டு நாட்களின் பின் ஆமர் வீதியில் உயர் பொலிஸ் அதிகாரிகள் அருகிலிருக்கவும், மெய்க்காவலர் கவசம்போல சூழ்ந்திருக்கவும் ஜனாதிபதி பிரேமதாஸ கொல்லப்பட்டார். இச்சம்பவத்தில் மேற்படி பொலிஸ் அதிகாரிகளும், மெய்க்காவலர்களும் பிரேமதாஸவுடன் சேர்ந்து விசுவாசப் பலியானார்கள்.

தன் உயிரை மாய்க்கத் தயாராகிவிட்ட ஒரு வெடிகுண்டு மனிதனின் முன் எத்தகைய பாதுகாப்புக் கவசமும் பயனற்றதாகி விடுகிறது.

அப்பொழுது நேரம் நடுப்பகல் 12.42 மணி.

அதுவரை நேரமும் ஜனாதிபதியுடன் நின்ற அவரது செய்தித்துறை செயலர் இவான்ஸ் குரே செல்ரெல் தொடர்புச் சாதனத்தில் அவரைஅழைத்த அவருடைய மகளிற்குப் பதில் சொல்வதற்காக ஊர்வலத்தின் இரைச்சல்களிலிருந்து விலகிச் சிறிது தூரம் நடந்து சென்ற வேளையில்,

வெடித்தது குண்டு.

அருகிலிருந்த பொலிஸ்காரர்களும் உட்பட ஒவ்வொருவரும் தமது சொந்தப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக முதலில் புகலிடங்களைத் தேடி ஓடினார்கள். அத்தருணத்தில் தங்களோடு நின்ற நாட்டின் முதல் மனிதரைப் பற்றி ஒருவரும் சிந்திக்கவில்லை.

உடனடியாக ஆமர் வீதி மூடப்பட்டது. சைரன்களை ஒலித்தபடி அம்பியூலன்ஸ்களும் இராணுவ வாகனங்களும் பறந்தன.

இவான்ஸ்குரே, ஜனாதிபதி தனது மெய்க்காவலர்களால் காப்பாற்றப்பட்டிருப்பார் என்றுதான் முதலில் நம்பினார். ஆனால், ஜனாதிபதியினுடையது என்று அடையாளம் காணப்படாமலே அவரது பாதி கருகிய, வயிறு பிளந்த உடல் ஏனைய சடலங்களோடு சேர்த்து பொலிசாரால் எடுத்துச் செல்லப்பட்டது.

ஜனாதிபதி எங்கே என்று எல்லாருமே தேடினார்கள்.

நவலோகா ஆஸ்பத்திரி, ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரி, கொழும்பு பொது ஆஸ்பத்திரி எனப் பல இடங்களில் காயமடைந்தவர்கள் மத்தியிலும், சடலங்களிற்கிடையிலும் நாட்டின் ஜனாதிபதி தேடப்பட்டார்.

அவர் மெய்க்காவலர்களால் காப்பாற்றப்பட்டு பாதுகாப்பான மறைவிடம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் பாராளுமன்றச் செயலாளர் நிகால் செனிவரட்னவிடத்திலும். 'சுசரித' விலும் ஜனாதிபதியைத் தேடினார்கள். எங்கேயும் அவரைக் காணவில்லை.

ரணில் விக்கிரமசிங்க ஊர்வலத்தில் ஒரு பகுதியில் சென்று கொண்டிருந்தவர். சம்பவத்தைக் கேள்விப்பட்டதும் தளம்பாமல் செயற்பட்ட முதல்நபர் அவர்தான். குண்டு வெடித்ததும் அவர் உடனடியாக ரூபவாகினிக் கூட்டுத்தாபன வாகனமொன்றில் ஏறி ஜனாதிபதிச் செயலகத்திற்கு விரைந்தார். பிரதமர் டி. பி. விஜயதுங்காவின் இருப்பிடத்தை அறிந்து அவரை விசேட பாதுகாப்புடன் ஜனாதிபதிச் செயலகத்திற்கு அழைத்து வருமாறு ரணில் அதிகாரிகளைப் பணித்தார். இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணவும் அழைக்கப்பட்டார்.

நேரம் நடுப்பகல் 12.55 மணி

ஜனாதிபதியின் செயலாளர் விஜேதாச, சட்டமா அதிபர் திலக் மாரப்பனவுடன் தொடர்பு கொண்டு ஆமர் வீதி குண்டுவெடிப்பைப் பற்றிக் கூறினார். ஜனாதிபதியின் நிலைபற்றித் தெரியவில்லை என்றும் கூறினார். மாரப்பன உடனடியாக தனது காரில் சொலிஸ்டர் ஜெனரல் செப்லி அசீசையும் அழைத்துக் கொண்டு ஜனாதிபதி செயலகத்திற்கு விரைந்தார்.

முப்படைத் தளபதிபதிகளும், கூட்டுப் படைத்தளபதியும் பொலிஸ்மா அதிபரும் ஜனாதிபதி செயலகத்திற்கு வந்து சேர்ந்து விட்டார்கள். ஒருவருக்குமே நாட்டின் ஜனாதிபதி என்னவானார் என்பது பற்றி ஒன்றும் தெரியாது.

திலக் மாரப்பன, பிரதம நீதியரசர் சில்வாவை அழைத்து வரும்படி செப்லி அசீசிடம் கூறினார். இத்தருணத்தில் விஜேதுங்க விசேட பாதுகாப்புடன் வந்திறங்கினார்.

ஜனாதிபதியின் இறுதிநிலை பற்றி அறியுமாறு பொலிஸ்மா அதிபர் ஏர்ணஸ் பெரேரா பணிக்கப்பட்டார்.

அவர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் செனிவரட்னவுடன் தொடர்பெடுத்தார்.

செனிவரட்ன சொன்னார், ஜனாதிபதி இறந்து விட்டார் என்று. அவர்தான் முதன் முதல் ஜனாதிபதியின்முடிவை தெரியப்படுத்தினார். அவரது வாக்கு மூலம் பதியப்பட்டது. பிறகு, ஜனாதிபதியின் மெய்க்காவலர் ஒருவர் அழைக்கப்பட்டு ஜனாதிபதியின் மரணம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. அப்பொழுது நேரம் பிற்பகல் 1.15.

பிரதமர், பதில் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்யும்வரை செய்தியை வெளியிட வேண்டாம் என்று அதிகாரிகளிற்கு கண்டிப்பாக உத்தரவிடப்பட்டது. நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவது என்றும், மேதினக் கூட்டங்களை ரத்துச்செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. உத்தரவுகள் பறந்தன.

இத்தருணத்தில் பிரதம நீதியரசரும் சபாநாயகர் மொகமட்டும், மற்றும் அமைச்சர்கள் பலரும் - சிறிசேனகுரே ஹமீற், நந்தாமத்யூ, ஜோன் அமரதுங்க - வந்து சேர்ந்தனர்.

ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், அரசியலமைப்பு நிபுணரும், பாராளுமன்ற உறுப்பினருமான சொக்ஸி ஆகியோர் அடுத்து நிகழவேண்டியவற்றை திட்டமிட்டனர். சட்டமா அதிபரும் விஜேதுங்கவும் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக விஜேதாசவின் அறைக்குள் ஆலோசனை நடத்தினர்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் செனிவரட்னவிடம் எதிர்க்கட்சிகளிற்கு செய்தி கூறும்படி பணிக்கப்பட்டது.

மேதினத்திற்காக கொழும்பில் திரண்டிருந்த மக்களை அமைதியாகக் கலைந்து போகும்படி ஒலிபெருக்கிகள் அறிவிக்கலாயின.

விஜயதுங்கவிடம் கையெழுத்துப் போடுகிறீகளா என்று மட்டுமே கேட்கப்பட்டது.

சொக்ஸியும் ஹமிற்றும் பதில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றவேண்டிய உரையைத் தயாரித்தனர்.

பிற்பகல் 2.15 மணிக்கு விஜயதுங்க நாட்டின் பதில் ஜனாதிபதியாக பிரதம நீதியரசர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம்செய்துகொண்டார்.

உடனடியாக அமைச்சரவையைக் கூட்டும்படி அங்கிருந்த அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் கூறினார்கள். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பிற்பகல் 2.30 மணி.

தேசிய பாதுகாப்புக்குழு பதில் ஜனாதிபதி தலைமையில் கூடியது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும்படி முப்படைத்தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் கூட்டுப்படைத் தளபதியும் பணிக்கப்பட்டார்கள். மேதினத்திற்காகக் கூடிய மக்கள் வீடு திரும்பும் வரை ஊரடங்கு உத்தரவை கடுமையாக அமுல் செய்ய வேண்டாம் என்றும் பணிக்கப்பட்டது. இவான்ஸ் குரே செய்தியாளர்களின் முன் ஜனாதிபதியின் மரணத்தையும் பதில் ஜனாதிபதியின் பதவி ஏற்பையும் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி கொல்லப்பட்ட செய்தி வெளிநாட்டு ஒலிபரப்புக்களின் மூலமே முதலில் தெரியவந்தது.

பிற்பகல் 4.00 மணிக்கு செய்தியாளர் மாநாடு கூட்டப்பட்டது. அப்பொழுது அமைச்சரவைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அதே சமயம் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும், செனிவரட்ன, பிரேமதாஸா கொல்லப்பட்டதை அறிவித்தார்.

சிறிமாவோவின் வீட்டில் கூடியிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனுதாபம் தெரிவிக்கும்செய்தியொன்றை வெளியிடுவது என்றும் எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டத்தை 6.30 மணிக்கு கூட்டுவது எனவும் முடிவெடுத்தார்கள். அப்பொழுது டி.யு.என். எவ் ஐச்சேர்ந்த விக்கிரம வீரசூரிய வந்தார்.

விஜயதாசவுடன்சிறிமாவோ தொடர்பு கொண்டு பிரதமரை பதில் ஜனாதிபதியாக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும் என்று வீரசூரிய யோசனை கூறினார் ஆனால் பிற்பகல் 6.30 மணிக்கு கூட்டணியிலுள்ள ஏனைய கடசிகளுடன் கலந்தாலோசித்த பின்பே இது பற்றி முடிவு எடுக்கலாம் என்று சிறிமாவோ கூறிவிட்டார்.

6.30 மணிக்குப் பின்னர், சிறிமாவோ சபாநாயகருடன் தொடர்பு கொண்டு நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரிக்கை விடுத்தார். சபாநாயகர்அதற்குஇணங்கினார்.

மாகாண சபைத் தேர்தலை ஒத்தி வைக்க வேண்டாம் என்றும் சிறிமாவோ தேர்தல் ஆணையாளரிடம் தொலைபேசிமூலம் கேட்டுக்கொண்டார்.

பதில் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பெடுத்து அவரைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கும்படியும் சிறிமாவோ கேட்டார். மே இரண்டாம் திகதி அதாவது மறுநாள் காலை சந்திப்பிற்கு நேரம் ஒதுக்கப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவை நாடாளுமன்றத்தின் மூலம் உறுதி செய்யும் வரை பிரதமர் தெரிவை மேற்கொள்வதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

ஆட்சிப்பொறுப்பு சுமுகமாக கைமாற்றப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு இரவு 10.00 மணிக்கு விஜயதுங்கவும் விஜேதாஸவும், பிரதமரின் செயலர் அபயசிங்க, மாரப்பன, செப்லி அசீஸ் ஆகியோரும் ஜனாதிபதி செயலகத்திலிருந்து புறப்பட்டார்கள்.

கொழும்பு நகரம் ஊரடங்குச் சட்டத்தின் இறுகிய பிடிக்குள் அமைதியாகத் துயின்று கொண்டிருந்தது.

இரவு 11.00 மணியளவில், ஜனாதிபதி பிரேமதாஸவின் பூதவுடல் வைக்கப்பட்ட பேழை மூடப்பட்ட நிலையில் அவருடைய 'சுசரித' இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டது.

மே இரண்டாம் திகதி.

காலை ஒன்பது மணியளவில் திருமதி பண்டாரநாயக்காவும் அவரது மருமகன் அநுருத்த ரத்வத்தயும் ஜனாதிபதி செயலகத்திற்கு வந்தனர். அங்கு சிறிமாவோ விஜேதுங்கவுடன் கதைத்தார். இச்சந்திப்பின் போது விஜேதுங்க, பிரேமதாஸவைக் கொன்ற தற்கொலைப்படைநபர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பது புகைப்படங்களிலிருந்துதெரிய வந்திருப்பதாக சிறிமாவோவிடம் கூறினார்.

பிறகு, யு.என்.பியின் நிறைவேற்றுக்குழுவும், நாடாளுமன்றக் குழுவும் கூடியது.

சிறிசேனகுரே ஜனாதிபதியாக விஜேதுங்கவை முன்மொழிய ஹமிற் வழிமொழிந்தார். கூட்டம் இருமணி நேரங்களிற்கும் மேலாக நீடித்தது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஒரு பகுதியினரும் மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோசலிச முன்னணி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகளும்திருமதி சிறிமாவோவைச் சந்தித்து எதிர்க்கட்சிகள் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக நிற்கும்படி கோரின.


யு.என். பிக்கு பெரும்பான்மை இருப்பதால் எதிர்க்கட்சி வேட்பாளருக்குத் தோல்வி நிச்சயம் என்று சிலர் இத்தருணத்தில் சுட்டிக்காட்டினர். வேறுசிலர் ஏற்கனவே பிரேமதாஸவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ரகசியமாகக் கைச்சாத்திட்ட யு. என். பிக்காரர்களின் ஆதரவு இச்சந்தர்ப்பத்தில் கிடைக்கும் என்று கூறமுயன்றனர். ஆனால், மேற்படி யு.என்.பிக்காரர் அப்பொழுது கைச்சாத்திட்டது பிரேமதாஸவிற்கு எதிராகவே தவிர யு. என். பிக்கு எதிராக இல்லை என்றும், இப்பொழுது பிரேமதாஸ இல்லாத நிலையில் அவர்கள் நிச்சயமாக யு. என்.பியைத்தான் ஆதரிப்பார்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டதோடு, இரகசிய வாக்கெடுப்பில் கலந்துகொள்ளும் போது சிலசமயம் சுதந்திரக்கட்சிக்குள் உள்ள உட்பூசல்கள் காரணமாக சில சுதந்திரக் கட்சியினர் கூட யு.என்.பி. வேட்பாளரை ஆதரிக்கக் கூடும் என்பதால் எதிர்க்கட்சி வேட்பாளரை நிறுத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. மேலும், முக்கியமாக சுதந்திரக்கட்சி ஜனாதிபதிமுறையையேஎதிர்க்கிறதுஎன்பதால்அக்கட்சிவேட்பாளர் ஒருவர் நாடாளுமன்றத்தின் மூலம்ஜனாதிபதியாக வரமுயல்வது பொருத்தமற்றது என்றும் நிமால் சிறிபால டி சில்வா கருத்து தெரிவித்தார். அத்துடன் ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு அரசியலமைப்பில் திருத்தம் செய்யத்தேவையான ஆதரவை சுதந்திரக்கட்சி நாடாளுமன்றத்தில் வழங்கலாம் என்றும் அவர் சொன்னார்.

நாலாம் திகதி, செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடியது. ஐந்து நிமிடங்கள் மட்டும் நீடித்த அமர்வில் ஜனாதிபதி தெரிவு நிகழவில்லை ஏழாம் திகதிவரை ஜனாதிபதி தெரிவு ஒத்திவைக்கப்பட்டது.

ஐந்தாம் திகதிவெசாக்தினம் வழமைபோலன்றி கலகலப்போ, சோடினைகளோ, வெளிச்சக் கூடுகளோ இன்றி சிங்களவர்கள் மிகஅமைதியாக வெசாக் நாளை அனுஷ்டித்துக் கொண்டிருக்கும்போது' கொழும்பில்குணசிங்கபுர, கெகலவத்த போன்ற பகுதிகளிலிருந்து தமிழர்கள் அகதிகளாய் புலம் பெயர்ந்தார்கள்.

ஆறாம் திகதி. சுதந்திரசதுக்கத்தில் பிரேமதாஸவின் கடைசிக் கிரியைகள் நடந்தன.

8ஆம் பக்கம் பார்க்க)



# வீரப்பனை பிடிக்க இராணுவ உதவி

## மாநில அரசுகள் கோரிக்கை

[டில்லி]

சந்தனக் கடத்தல் காரர் வீரப்பனை பிடிக்க தமிழக கர்நாடக அரசுகள் இராணுவ உதவியை கோரியிருப்பதாக மத்திய உள்நாட்டு பாதுகாப்பு இணையமைச்சர் ராஜேஷ் பைலட் தெரிவித்தார். நேற்று மக்களவையில் இதை குறிப்பிட்ட அவர் மாநில அரசுகளின் வேண்டுகோளை ஏற்று இராணுவத்தை அனுப்புவதற்கான வழிமுறைகளை அரசு ஆராய்ந்து வருவதாக கூறினார்.

முன்னதாக வீரப்பனை கைது செய்ய இராணுவம் அழைக்கப்படவேண்டிய அவசியம் இல்லை என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்திய அரசினால் தேடப்பட்டு வரும் சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பனைக் கைது செய்வதற்கு புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளதாக ராஜேஷ் பைலட் கூறியுள்ளார். எனினும் இத்திட்டம் குறித்து விபரங்களை அமைச்சர் வெளியிடவில்லை.

### ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு

# தலைமைப் பொறுப்பேற்க சிறிமானி லலித் தயார்!

## மேல்மாகாண முதலமைச்சராகவும் விருப்பம்

(கொழும்பு)

கொலை செய்யப்பட்ட லலித் அத்துலத் முதலியின் மனைவி திருமதி சிறிமானி அத்துலத்முதலி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமையை ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார். மேல் மாகாண சபை முதலமைச்சராக வரத்தயாராக இருப்பதாகவும் அவர்தெரிவித்தார்.

தனது கணவனின் மரணத்துக்கு துக்கம் அனுசரிக்கும் வகையில் வெள்ளைச் சேலையுடன் உலகப் பத்திரிகையாளர்களைச்சந்தித்துள்ளார். திரு. அத்துலத் முதலிக்கு அரசியலில் இருந்த அந்தஸ்தின் அடிப்படையில் திருமதி அத்துலத்முதலி அரசியலில் நுழைந்திருக்கிறார், கட்சியின் கொள்கை குறித்து அவரிடம் கேட்டபோது அருகில் அமர்ந்திருந்த ஒருவர் பதிலளித்தார்.

அதேவேளை திருமதி ஹேமா பிரேமதாசா அவர்கள் தனது கணவனின் இறுதிச் சடங்கில் பலமரபுகளையும் மீறி உரைநிகழ்த்தியுள்ளார். தனது கணவரின் செயல்களைத் தாம் தொடர்வதற்கு எல்லாவகையிலும் உதவும்படி நாட்டுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சிக் கல்விக்கோட்டப்பாடசாலை அதிபர்களுக்கு பாடசாலை மாணவ உணவு முத்திரை, க. பொ. த. தேர்வின் விண்ணப்பம் சம்பந்தமான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு சாவகச்சேரி யா/ றிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற இருப்பதால் சகல பாடசாலை அதிபர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### "கலந்துரையாடல்"

இன்று பி. ப. 1.00 மணியளவில் கருத்திட்ட வேலை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று கோப்பாய் பிரதேசச் செயலகத்தில் நடைபெறவிருப்பதால் கோப்பாய் பிரதேசச் செயலகத்தின் கீழ் வரும் சகல கிராம சேவை அலுவலர்களும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ★

தீவக கோட்டத்திற்கு உட்பட்ட மாவீரர் செயற்பாட்டுக் குழுவினருடனான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10.00 மணிக்கு தீவக மாவீரர் பணிமனையில் நடைபெறும்.

இவ் ஒன்று கூடலில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தீவக மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் வேண்டிக்கொள்கிறார். (90)

### எதிர்க்கட்சி

கும் இடையே தேர்தல் தொடர்பாக வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது அமைச்சர் எதிர்க்கட்சி ஆதரவாளரைப் பாய்ந்து கடித்துள்ளார்.

இதனையடுத்து கடிவாங்கியவர் பொலிசாரிடம் முறையிட்டார் என பொலிஸ் வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

## வெற்றிடத்தை நிரப்ப ஜே.ஆர்.ஆல்தான்முடியுமாம்

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் இரு அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டதால் உருவாகிய அரசியல் வெற்றிடத்தை நிரப்புவதற்குமுன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால்தான்முடியும்என்று பலரும் பேசிக் கொள்வதாக வெரித்தாஸ் வானொலி தெரிவிக்கின்றது.

அதேவேளைதிரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா பிரேமதாசாவின் மரணச்சடங்கில் கலந்து கொள்ளாததற்குக் காரணம் அவர் துயரத்தில் ஆழ்ந்துள்ளமையே என்று கூறப்படுகிறது.

## வீரவணக்க கூட்டம்

(தென்மராட்சி)

கொடிகாமம் வட்டத்தில் 5-ம் மாதம் வீரச்சாவடைந்த மாவீரருடைய நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிறு இரவு 7 மணிக்குக் கச்சாய் தெற்கு அம்மன் ஆலயத்தில் நடைபெறும். இதில விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பலர் உரை நிகழ்த்துவார்கள். பின்பு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (86)

### பரிசில் வழங்க முடிவு

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் நடாத்தும் க. பொ. த. (உயர்தர) முன்னோடித் தேர்வில் தமிழ்ப் பாடத்தில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் மாணவர்கட்கு கீழ்க்காணும் அடிப்படையில் பணப்பரிசில்களை வழங்கத் தமிழ் வளர்ச்சிக் கழகம் முன்வந்துள்ளது.

மாவட்ட மட்டத்தில்:1ஆம் பரிசு - ரூ. 3000, 2ஆம் பரிசு ரூ 2000, 3ஆம் பரிசு ரூ 1000

கோட்ட மட்டத்தில் ஒரு பரிசு - ரூ. 1000

1993-05-20 ஆம் திகதிக்கு முன் அவசியமான படிவங்களை அதிபர்கள் யாழ். கல்வித் திணைக்களத்திலிருந்து சேகரித்து 1993-05-28 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

### யாழ்.

டுள்ளார்.

ஏனைய நால்வரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிய வருகிறது

### முப்படைத்

கல், தேவசகாயம் யூலியா [25] குருநகர், மாணிக்கம் கோடீஸ்வரன் [30] இணுவில், பு. றஞ்சித் [22] குருநகர், செல்வராசா [35] ஆனைக்கோட்டை, ஜோசவ் சில்வஸ்ரர் [27] யாழ்ப்பாணம், அருளானந்தராசா [45] கொக்குவில், சின்னையா சேனாதிராசா, [52] பளை, சீவரத்தினம் விக்னேஸ்வரன் [26] சாவக்காடு ஆகியோர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பதினைந்திற்கு மேற்பட்டோர் சிறு சிறு காயங்களுக்கு உள்ளாகினர், இவர்கள் சாவகச்சேரி மற்றும் பளை அரசினர் வைத்தியசாலைகளிலும் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றனர் (86, 35, சி)

### குண்டுவீச்சில்

தோம், அப்போது வானத்தில் விமானங்கள் இரண்டு வருவதை நான் கண்டேன். மற்றவர்களுக்கு சொல்வதற்குள் அது ரொக்கட் தாக்குதலை நடத்தத் தொடங்கி விட்டது. அப்போது நீரினுள் வீழ்ந்து படுத்த நான் தாக்குதல் முடிவுற்றதும் எழுந்து பார்த்த போது எல்லோரும் ஓடிக் கொண்டிருந்தார்கள். எனது கைகளிலும் காலிலும் முதுகுப் பகுதியில் இருந்தும் இரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. அப்போது என்னைத் தூக்கிவிடுமாறு பலத்து கத்தினேன். நான் பின் மயக்கமடைந்துவிட்டேன்'' என்றார். (சி)

### உலக

ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக அமெரிக்காவில்தான் சனத்தொகை கூடுதலாக உள்ளது. இங்கு வருடாந்தம் 30 லட்சத்தினால் சனத்தொகை அதிகரிக்கின்றது. அமெரிக்காவில் சென்று குடியேறுவோர் காரணமாகவும் இறப்புவீதக் குறைவினாலும் இந்தநிலை அங்கு காணப்படுகிறது.

ஆபிரிக்காவின்சனத்தொகை அதிகரிப்பு அதிகளவில் காணப்படுகிறது. இங்கு சராசரியாக ஒரு பெண் 6இற்கும் மேல் குழந்தைகளைப் பிரசவிக்கின்றார் என தெரிவிக்கப்படுகின்றது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 13-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9425

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்: இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-1182, 24-5679, 22-8075, 24-3071, 24-4560, 26-7286, 42-1323, 24 5461, 27-9719, 24-5955, 22-9127, 40-1188, 26-2737, 24-5406, 27-5775, 24-0207, 24-6972, 26-7068, 24-5396.

## மரண அறிவித்தல்

## செல்வி Dr. வசந்தகுமாரி வைத்திலிங்கம் M.B.B.S.

செல்வி வைத்திய கலாநிதி வசந்தகுமாரி வைத்திலிங்கம் [யாழ். போதனா வைத்தியசாலை) காலமானார்.

இவர் காரைநகர் வினாசித்தம்பி வைத்திலிங்கம் (இளைப்பாறிய முன்னாள் உதவி அரசாங்க அதிபர், மூதூர்), திருமதி பாலாமணி வைத்திலிங்கம் ஆகியோரின் அன்பு மகளும், சந்திரகுமார் (திட்டமிடல் இலாகா வடகிழக்கு மாகாணசபை, திருமலை), சாந்தகுமாரி (ஆசிரியை, Dr. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் காரைநகர்), சிவகுமார் (ஸ்ரீ அன்னபூர்ணா களஞ்சியம் யாழ்ப்பாணம்), ராஜ்குமார் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (14-5-93) பிற்பகல் 4 மணியளவில் இல, 17, செம்மணிவீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:

இல: 17 செம்மணி வீதி, நல்லூர். (4869) வி. வைத்திலிங்கம் [தகப்பன்]


## அறிவித்தல்

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல், 14-05-1993 இன்று காலை 10.00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

- நிர்வாகம்.

(4861)

## ஸ்ரீதர் திரையரங்கில்

# In the Line of Duty

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

[சி-6575]

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY VADDUKODDAI.

மர வேலை கட்டட வேலை

## பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்தின் (CARE INTERNATIONAL) உதவியுடன் இலவச பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.

காலம்:- 2½ மாதங்கள்

ஒழுங்கான பயிலுநர்களுக்கு:

1. நாளாந்த ஊக்குவிப்புப் படியாக ரூபா 30/- வழங்கப்படும்.
2. ஆரம்பப் பயிற்சியின் பின் 10 மாதங்கள் வேலைத் தளங்களில் தொழில் பயிற்சி.
3. பயிற்சி முடிவில் இலவச உபகரணப் பொதி.

ஆர்வமுள்ள ஆண்/பெண் விண்ணப்பதாரிகள் நேரிலே வந்து யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம் வட்டுக்கோட்டைக் காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 24-05-1993

நேர்முகப் பரீட்சை : 27-05-1993 மு. ப. 9-00 மணி

(சி†6623) - பணிப்பாளர்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 14 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.